# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

259

ஆளுமைச் சிறப்பிதழ்

வைகாசி 05.05.2025

100/-



என்.செல்வராசா

பஹீமா ஜஹான்

நூருள் அயின் நஜ்முல் ஹுசைன்

எச்.எச்.விக்ரமசிங்க

திக்குவல்லை கமால்

எம்.எஸ்.எம்.அனஸ்

இ.சு.முரளிதரன்

புலோலியூர் வேல் நந்தகுமார்

கே.பொன்னுத்துரை

# நயீமா சித்தீக் சிறப்பிதழ்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2025.05.05 - வைகாசி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

மலையக முஸ்லிம்களின்
முன்னோடிப் பெண் படைப்பிலக்கியவாதி
நயீமா சித்தீக்
- என்.செல்வராஜா / 03

"இலக்கியத் தாரகை"
நயீமா சித்தீக்கின் இலக்கியங்கள்
- பஹீமா ஜஹான் / 06

கலாபூஷணம் நயீமா சித்தீக்
மலையக பெண் படைப்பாளி
- நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் /10

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமை
நயீமா ஏ.சித்திக்
- எச்.எச்.விக்ரமசிங்க /12

நானும் என் எழுத்துக்களும்
- நயீமா சித்தீக் / 14

நயீமா சித்தீக் இலக்கியச் சுவடுகள்
- திக்குவல்லை கமால் /16

நயீமா சித்தீக்கின் : வாழ்க்கை வண்ணங்கள்
- பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் / 18

வாழ்க்கை வளைவுகள்:
வசீகரக்கதைகள்
- இ.சு.முரளிதரன் /24

நயீமா சித்தீக்கின் வாழ்க்கைப்பயணம்
குடும்ப நாவல் குறித்த
ஒரு வாசகநிலை நோக்கு
- புலோலியூர் வேல்நந்தகுமார் /26

மலையகத்தின் மூத்த பெண் படைப்பாளி
திருமதி நயீமா சித்தீக்
- கே.பொன்னுத்துரை / 28



சிறுகதை
நயீமா சித்தீக் - 20, 31



கவிதை
நயீமா சித்தீக் - 23

# ஜீவநதி

**2025 வைகாசி இதழ் - 259**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


## ஈழத்து முதற் பெண் முஸ்லிம் நாவலாசிரியர்
## நயீமா சித்தீக்

ஈழத்து இலக்கிய வரலாற்றின் வளர்ச்சிக்கு முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பலர் உரமாக இருந்து வருகின்றார்கள். அந்தவகையில் 1974 இல் "வாழ்க்கைப் பயணம்" என்ற நாவலை எழுதிய நயீமா சித்தீக் அவர்கள் ஈழத்து முதற் பெண் முஸ்லிம் நாவலாசிரியராகக் கூறப்படுகின்றார். 1948 ஆம் ஆண்டு தை மாதம் 07 ஆம் திகதி பசீர் மரைக்கார், தாஜ் பீபி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். பசறை மகா வித்தியாலயத்தில் தனக்கான கல்வியைப் பெற்றுக் கொண்டார். தனது இளமைக் காலம் முதல் துணிச்சலான கருத்துக்களை முன் வைக்கும் பெண்மணியாக அம்மையார் திகழ்ந்து வருகின்றார். பாடசாலைக்காலத்தில் ஏற்பட்ட வாசிப்பே தன்னை ஓர் எழுத்தாளராக ஆக்கியது என பெருமையுடன் கூறிக் கொள்ளும் நயீமா அவர்கள் பாடசாலைக்காலத்திலேயே பல்வேறு கூட்டங்களிலும் துணிச்சலான பேச்சாளராக இனம் காணப்பட்டார். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் மாதர் பிரிவின் அகில இலங்கைத் தலைவியாக இளம் வயதில் பணியாற்றியுள்ளார். இளம் தென்றல் என்னும் புனைபெயரிலும் சில காலம் எழுதி வந்த இவர் பத்திரிகைகள் சிலவற்றில் இலக்கியப் பக்கங்கள் சிலவற்றிற்கு பொறுப்பாக இருந்தவர். நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை என இலக்கியத்தின் பல் வகைமைகளிலும் கைதேர்ந்தவராக விளங்கினார். கவியரங்கங்கள், வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றில் தொடர்ந்து பங்குபற்றி தன் ஆளுமையை விருத்தி செய்தவர். ஆசிரியராகப் பணியாற்றிய இவர் மாணவர் நலன் கருதி பல பயிற்சி வினாவிடை நூல்களையும் எழுதி மாணவர்களுக்கு உதவி புரிந்துள்ளார். இவரது சேவையைப் பாராட்டி 1991 ஆம் ஆண்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு இவருக்கு "இலக்கிய தாரகை" என்னும் பட்டத்தை அளித்து கௌரவித்தது. மேலும் "சிறுகதை செம்மணி", "கலாபூஷணம்" விருதுகளைப் பெற்றுள்ளார். கொடகே, துரைவி விருதுகளையும் இவர் தனது இலக்கியச் சேவைக்காகப் பெற்றுள்ளார். மலையகத்தின் மூத்த பெண் படைப்பாளியான இவர் இளம் எழுத்தாளர்கள் மாணவர்களை ஊக்குவித்து வருகின்ற அருமையான ஒரு படைப்பாளியாக திகழ்பவர். அம்மையாரின் இலக்கியப் பணியை கருத்தில் கொண்டு அவரை கௌரவித்து இச்சிறப்பிதழை வெளியிட்டு ஜீவநதி மகிழ்கின்றது.

- க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
புத்தகப்பண்பாட்டுப் பேரவை

■ என்.செல்வராஜா

# மலையக முஸ்லிம்களின் முன்னோடிப் பெண் படைப்பிலக்கியவாதி நயிமா சித்தீக்

ஈழத்தமிழரின் படைப்பிலக்கிய வரலாற்றில் மலையகத்தவரின் பங்களிப்பும் முக்கியமானதாகும். மலையகப் படைப்பாளிகளின் இலக்கியப் பங்களிப்பினை உள்வாங்காத எந்தவொரு ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பதிவும் முழுமைபெற்றதாகக் கருத முடியாது. ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு புதிய வடிவத்தைக் கொடுப்பதில் மலையக இலக்கியவாதிகள் பலர் நூற்றாண்டுகள் கடந்த நிலையில் பங்களித்து வந்திருக்கின்றனர். மலையகத்தின் மூத்த பெண் படைப்பாளிகளான திருமதி மீனாட்சியம்மாள் நடேசையர், தூரத்துப் பச்சை நாவலாசிரியர் கோகிலம் சுப்பையா, திருமதி சிவபாக்கியம் குமாரவேல் என்று தொடரும் இவ்வரிசையில், இலங்கை மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் வரிசையில் முன்னோடியாகத் திகழ்பவர் நயிமா சித்தீக் அவர்களாவார்.



இலங்கையின் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் அப்புத்தளையைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்டவர் நயிமா சித்தீக். 1948ம் ஆண்டில் பஷீர் மரைக்கார், தாஜ்பீவி தம்பதியினரின் ஏக புதல்வியாக பிறந்த நயீமா, பசறை மத்திய கல்லூரி, காத்தான்குடி மத்திய கல்லூரி ஆகியவற்றில் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். இவர், பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமானிப்பட்டத்தையும் கல்வித்துறை டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார். பிற்காலத்தில் தேசிய மட்டத்தில் சிறப்பிடம்பெற்று விளங்கிய தனது எழுத்துத்துறையின் ஈடுபாட்டுக்கு தன் பெற்றோர் தன்னுள் ஏற்றி வைத்த வாசிப்பின் மீதான ஆர்வமும், பசறை மத்திய கல்லூரியின் தமிழாசிரியரான அமரர் ஐ.சாரங்கபாணியின் தூண்டுதலும் ஆசியுமே காரணமாகக் கருதுகிறார்.

1970ம் ஆண்டுமுதல் ஆசிரியராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற படைப்பாளி நயீமா, ஆரம்பத்தில் ஒரு சிறுகதைப் படைப்பாளியாகவே தன்னை இனம்காட்டிக் கொண்டவர். 1960களில் தனது ஏழாவது வகுப்பிலே இவர் எழுதிய கதையொன்றினை தினகரன் பத்திரிகை பிரசுரித்தது. இதுவே இவரது படைப்புலகப்

படையெடுப்பின் முதல் தடமாகும். இதுவரை நான்கு நாவல்களையும், 750க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் இவர் படைத்துள்ளார். இவரது கதைகள் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தினபதி, என்று தொடர்ந்து பின்னாளில் தினக்குரல், நவமணி போன்ற ஈழத்து பத்திரிகைகளிலும் தமிழகத்தில் நா.பார்த்தசாரதியின் தீபம் இதழ்களிலும் வெளிவந்துள்ளன.

எழுத்துலகப் பணிகளுக்கப்பால் 1960களிலிருந்து இலங்கை வானொலியிலும் உரைச் சித்திரம், வானொலி நாடகங்கள் இலக்கிய உரைகள், கவியரங்குகள் என்று பல்வேறு வடிவங்களிலும் இவரது பங்களிப்புத் தொடர்ந்துள்ளது.

தனது இளமைக் காலத்திலேயே சிறந்த மேடைப்பேச்சாளராகத் திகழ்ந்தவர் நயிமா. குறிப்பாக முஸ்லிம் பெண்களின் சமூக விழிப்புணர்வு தொடர்பான இவரது கருத்துக்கள் படைப்பிலக்கியங்களின் வழியாக மாத்திரமின்றி இவரது மேடைப் பேச்சுக்களிலும், விதைக்கப்பட்டிருந்தன. தனது 17ஆவது வயதிலிருந்தே இவர் பொது மேடைகளில் களைகட்டிவந்துள்ளார். இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்ற மீலாத் விழாக்கள், கலை விழாக்கள், இலக்கிய விழாக்களின் மேடைகளில் இவரது குரல் உரத்து ஒலித்து வந்துள்ளது.

ஆக்க இலக்கியத்துறைக்கு அப்பால், பத்திரிகைத்துறையிலும் நயிமா சித்தீக்கின் பங்களிப்பு கணிசமான அளவு இருந்துள்ளது. தினமணி, சிந்தாமணி பத்திரிகைகளின் அப்புத்தளைச் செய்தியாளராகப் பணியாற்றிவந்துள்ள இவர் தன் செய்தி வழங்கலினூடாக அப்பிரதேசத்துச் சமூகச் சீர்கேடுகளையும் அவ்வப்போது அம்பலப்படுத்திவந்துள்ளார். மலையகத்தின் பெண் பத்திரிகையாளர்களின் முன்னோடியாகவும் இவர் திகழ்ந்திருக்கிறார். அக்காலத்தில் மலையகத்தில் வெளிவந்த தீப்பொறி என்ற பத்திரிகையின் பெண்கள் பகுதிக்குப் பொறுப்பாளராக நயீமா இருந்துள்ளார். கண்டியைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் குமாரவேலுவுடன் இணைந்து பெண்களுக்கான சஞ்சிகையான மங்கை என்ற சிற்றிதழையும் இவர் சிலகாலம் நடத்தியிருக்கிறார்.

மறைந்த தோழர் ஏ.அஸீசின் காலத்தில், அவரது ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பின் மாதர் பிரிவுத் தலைவியாகவும் இவர் சிலகாலம் பணியாற்றியுள்ளார். இப்பதவியின் வழியாக மலையகத் தோட்டப்புறப் பெண்களின் சமூக மேம்பாட்டிற்கான பல திட்டங்களை இவரால் பரிசோதித்துப் பார்க்கவும், செயற்படுத்தவும் முடிந்துள்ளது.

மலையகச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அப்புத்தளையில் அசோக வித்தியாலயம் என்ற பெயரில் கல்விக்கூடம் ஒன்றினையும் ஆரம்பித்து மலையகக் கல்வி அபிவிருத்திக்குத் தன்பங்கையும் இவர் ஆற்றிவந்துள்ளார்.

இவரது படைப்பிலக்கியப் பணியினைப் பாராட்டிப் பல்வேறு சமூகநலத் தாபனங்கள் இவரைப் பாராட்டி விருதுகளும் வழங்கிக்குவித்துள்ளன.

1986இல் மலையக கலை இலக்கியப்பேரவை முதன் முதலில் இவரது இலக்கியப்பணிகளை இனம் கண்டு விருது வழங்கிக் கௌரவித்தது. அதன்பின் 1989இல் மத்திய மாகாணத் தமிழ் சாகித்திய விழாவில் விருதுடன் சான்றிதழும் பொற்கிழியும் இவருக்குக் கிடைத்தது. 1991ம் ஆண்டு மத்திய மாகாண முஸ்லிம் தமிழ் சாகித்திய விழாவில் நஜ்முல் அதீப் என்ற இலக்கிய தாரகைப் பட்டமும் விருதும் இவருக்குக் கிட்டியது. 1994ம் ஆண்டில் தான் பிறந்த மண்ணான ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழாவில் விருதும் பொற்கிழியும் பெற்றுக் கொண்டார். 2002இல் கொழும்பில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டில் நயிமா சித்தீக் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அதே ஆண்டு (2002) கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், ஞானம் இலக்கியப் பண்ணையும் இணைந்து நடத்திய சுதந்திரன் சிறுகதைகள் நூல் அறிமுக விழாவின் போது யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களால் பொன்னாடை போர்க்கப்பட்டு சிறப்புக் கௌரவம் இவருக்கு வழங்கப்பட்டது. 2004இல் உடத்தலவின்ன சிந்தனை வட்டம் இவருக்கு சிறுகதைச் செம்மணி என்ற விருதினை வழங்கியிருந்தது. மீண்டும் 2005இல் இலங்கை அரசினால் வழங்கப்பெற்ற கலாபூஷணம் விருதினையும் இலக்கியவாதி நயீமா சித்தீக் பெற்றுக்கொண்டார்.

நயீமா சித்தீக்கை இன்று கடல் கடந்தும் ஈழத்துத் தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் அதிகம் பேச வைத்தது அவரது இலக்கியச் செயற்பாடுகள் என்றே கருதுகின்றேன். குறிப்பாக சிறுகதைத் துறையில் அவரது பணி பரந்து விரிந்து காணப்படுகின்றது. தான் சார்ந்த சமூகத்தின் அவலங்களையும் மூட நம்பிக்கைகளையும் முகத்திலறைந்து தெரியப்படுத்தும் இவரது துணிவினை நயீமாவின் சிறுகதைகளின் வழியாகத் தெரிந்து கொள்ளலாம்.

நூலுருவில் வெளிவந்த இவரது முதலாவது நாவலான வாழ்க்கைப் பயணம், இவரது திருமணத்துக்கு முன்னர் நயிமா யு.பஷீர் என்ற பெயரில் கொழும்பு வீரகேசரி வெளியீடாக 1975 இல் வெளிவந்திருந்தது. இலங்கையில் முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவரினால் எழுதப்பட்டு நூலுருவில் பிரசுரமான முதல் நாவல் என்ற வரலாற்றுப் பதிவையும் இவரது வாழ்க்கைப் பயணம் என்ற நூல் பெற்றுக்கொண்டுள்ளது.

கல்லூரி ஆசிரியை ஹிதாயாவை அக்கல்லூரி அதிபர் மஃறுப் காதலிக்கிறார். இக்காதல் நிறைவேற மஃறுபின் மைத்துணியும் தந்தை ஹாஜியாரும் தடையாகின்றனர். சந்தர்ப்பவசத்தால் காதலர் பிரிகின்றனர். மீண்டும் இருவரும் இணைய ஹாஜியார் சம்மதம் தந்த வேளையில் ஹிதாயா நீர்ச்சுழியில் சிக்கி உயிரிழக்கிறாள். இதுவே இந்நாவலின் கதைச் சுருக்கம்.

இவரது இரண்டாவது நூலாகவும், முதலாவது

சிறுகதைத் தொகுதியாகவும் கருதப்படுவது வாழ்க்கையின் சுவடுகள் என்ற நூலாகும். எஸ்.எம். ஹனிபாவின், கல்ஹின்னை தமிழ் மன்றத்தினர் இந்நூலை 1987இல் அச்சிட்டு வெளியிட்டிருந்தனர். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியான நயிமா சித்தீக்கின் பதினொரு சிறு கதைகளின் தொகுப்பு இதுவாகும். (நூலின் அட்டையில் வாழ்க்கைச் சுவடுகள் என்று தவறாகத் தலைப்பிடப் பட்டுள்ளது. நூல்தேட்டம் பதிவு 609).

வாழ்க்கை வண்ணங்கள் என்ற பெயரில் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதி உடத்தல வின்ன சிந்தனை வட்டத்தினால் தமது 196ஆவது பிரசுரமாக டிசம்பர் 2004 இல் வெளியிடப்பட்டது. தான் தத்ரூபமாகச் சித்திரித்து வாசகரின் சிந்தனையைத் தூண்டுவதில் இவரது சார்ந்த முஸ்லீம் சமூகத்தின் அவலங்களையும், மூடநம்பிக்கைகளையும் எழுத் தாற்றல் தனித்துவமானது. இத்தொகுப்பில் 14 சிறு கதைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் முஸ்லீம் சமூகத் தில் இடம்பெற்றுவரும் திருமணச் சந்தை வியாபாரத் தின் பல்வேறு கோணப் பார்வைகள் இக்கதைகளில் காணப்படுகின்றன.

வாழ்க்கை வளைவுகள் என்ற பெயரில் நயீமா சித்தீக்கின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி சென்னை, மணிமேகலைப் பிரசுரத்தினால் 2005ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. வாழ்க்கை வளைவுகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 20 சிறுகதைகளும், சீதனப்பிரச்சினையை மட்டும் கருவாகக் கொள்ளாது, கல்வி, உளவியல், சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், பல்லின மக்களின் மத்தியில் நல்லிணக்கம் முதலான பல்வேறு கருத்துக்களையும் உள்ளடக்கி யுள்ளன. முஸ்லீம் சமூகத்தில் நிலவும் பல்வேறு நிகழ்வுகளிலிருந்து இவரது ஒவ்வொரு கதையும் கருக் கொண்டுள்ளது. மலையக மக்களின் அன்றாட உரையாடல்களில் வரும் சிங்கள மொழியின் கலப்பு, இவரது கதைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துவதை வாசகர் களால் எளிதில் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

தனிநூல்களாக மட்டுமன்றி, வேறும் சில ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்புகளிலும் நயிமா சித்தீக்கின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

தியாகத் திருநாள் கதைகள் என்ற தலைப்பில் மானா மக்கீன் தொகுப்பாசிரியராகவும், லேனா தமிழ்வாணன் பதிப்பாசிரியராகவும் செயற்பட்டு ஒரு சிறுகதைத் தொகுப்பினை சென்னை மணிமேகலைப் பிரசுரத்தின் வழியாக 1999 இல் கொண்டுவந்தார்கள்.

இலங்கை இந்திய தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளைக்கொண்ட இத்தொகுப்பில் 8 இந்திய தமிழ் எழுத்தாளர்களினதும், அ.ஸ.அப்துஸ் ஸமது, ஜுனைதா ஷெரீப், எஸ்.எல்.எம். ஹனிபா, எஸ்.முத்து மீரான், எம்.எச்.எம்.சம்ஸ், மானா மக்கீன் ஆகி யோருடன் நயிமா சித்தீக் எழுதிய கதையொன்றுமாக மொத்தம் 15 இஸ்லாமியச் சிறுகதைகள் இடம் பெற்றிருந்தன. இத்தொகுப்பின் மற்றொரு பொது அம்சம் யாதெனில் இதில் இடம்பெற்ற 15 கதைகளும் இஸ்லாமியரின் ஹஜ் திருநாள் பற்றிய பின்புலத்தில் உருவானவையாக இருந்தமையாகும்.

அம்மா என்ற பெயரில் 25 இலங்கை பெண் எழுத் தாளர்களின் சிறுகதைகளை மலையக எழுத்தாளரும் வெளியீட்டாளருமான அந்தனி ஜீவா தொகுத்திருந்தார். இது சென்னை கலைஞன் பதிப்பக வெளியீடாக 2004 இல் வெளிவந்திருந்தது. தொகுப்பாசிரியர் அந்தனி ஜீவா



பஹீமா ஜஹான்

# "இலக்கியத் தாரகை" நயீமா சித்தீக்கின் இலக்கியங்கள்

*எல்லா நன்றியறிதல்களும்*
*பதிலுபகாரங்களும்*
*உன்னைக் கொஞ்சம்*
*சிறுமைப்படுத்தவே செய்கின்றன*
*இன்றிலிருந்து உனது*
*எல்லாப் பரிசுகளையும்*
*நான் தரையில் விட்டுவிடுகிறேன்*
*ஈரம் காணாத*
*நாய்க் குட்டிகளைப் போல*
*தம் திசைகளைத்*
*தாமே அறியட்டுமென்று*
*(மனுஷ்ய புத்திரன்)*



சமூகத்தில் நடக்கும் சில நிகழ்வுகள் நமது எண்ணங்களிலும் உணர்வுகளிலும் பலவிதத் தாக்கங்களை நிகழ்த்திச் செல்வதுண்டு. எனினும், அவற்றை உள்வாங்கிக் கொண்டு, பெருமளவில் தனக்குள் அதிர்கிறான் ஒரு படைப்பாளி. அவற்றை வெளிப்படுத்தும் விதங்களாகப் பல்வேறு கலை வடிவங்களைக் கண்டடைகிறான். இவ்வாறு சமூகத்தில் நிலவும் பலதரப்பட்ட நிகழ்வுகளிலிருந்தே நயீமாவின் ஒவ்வொரு படைப்பும் தனது சிறகுகளை அசைத்து மேலே உந்திப் பறந்தன. அவை சிறுகதையாக, நாவலாக, தொடர்கதையாக, கவிதையாக வடிவம் கொண்டன.

தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் பங்களிப்புச் செய்திருக்கும் முஸ்லிம்கள் பலர் உள்ளனர். இவர்களுள் ஆண்களே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். எனினும் கல்வித் துறையில் முஸ்லிம் பெண்கள் ஈடுபடத் தொடங்கிய பின்னர் பெண்களும் படைப்பிலக்கிய முயற்சிகளில் தம்மைப் பிணைத்தனர். அவர்களுள் ஒருவரான திருமதி. நயீமா சித்தீக் அவர்களின் இலக்கியப் பணிபற்றிய ஆய்வை முன்வைப்பதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.

கம்பளையை வாழிடமாகக் கொண்ட இவர் தற்போது ஓர் இளைப்பாறிய ஆசிரியையாவார். இவர் 1960 களிலிருந்து இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ளார். இன்றுவரை இவரது எழுத்துப் பணி தொடர்வது நமக்கு வியப்பாகவும் மறுபுறம் மகிழ்ச்சியாகவும் உள்ளது.

பசீர் மரைக்கார், தாஜ் பீபி தம்பதிக்கு 1948 ஜனவரி 07ம் திகதியன்று நயீமா பிறந்தார். 5ம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பசறை மத்திய மகா வித்தியாலயத்திற்குத் தனது கல்வியைத் தொடரச் - சென்றார். அங்கு தமிழ்ப் பிரிவில் இவரும் கிறிஸ்தவ மாணவியொருவரும் மாத்திரமே கல்வி கற்றனர். அந்த ஒரே மாணவியும் வீட்டுக்குச் சென்றுவிடும் சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் நயீமா மாத்திரமே விடுதியில் தரித்திருப்பார். அந்த விடுதியின் அமைதி, தனிமை, விடுதியைச் சூழவிருக்கும் தேயிலைத் தோட்டங்கள், அங்கு வேலையிலீடுபடும் மக்களின் வறுமை நிலை எல்லாம் இவரது சிந்தனைத் தளத்திற் பல்வேறு தாக்கங்களை நிகழ்த்திற்று. இந்தப் பாதிப்புகள் மனதில் ஊறி ஊறிப் பின்னர் அவற்றையெல்லாம்

வெளிக்கொணரும் ஆர்வத்தை ஏற்படுத்திற்று. தனிமைச் சூழ்நிலையே பெரும்பாலான படைப்பாளி களிடமிருந்து சிறப்பான படைப்புகள் வெளிவரக் காரணமாயிருப்பதை இவ்விடத்தில் நாம் மனதிற் கொள்ளலாம்.

பாடசாலைப் பருவத்திலேயே வீட்டுச் சூழல் இவருக்கு வாசிக்கும் பழக்கத்தை வழங்கியது. இவரது தாயார் நிறைய வாசிக்கும் படிப்பாளியாக இருந்துள் ளார். அக்காலத்தில் தமிழ் எழுத்துலகில் சிறந்து விளங்கிய புதுமைப்பித்தன், கல்கி, ஜெயகாந்தன், லக்ஷ்மி, அகிலன் போன்ற பலரையும் பற்றித் தாயாரிட மிருந்து இவர் அறிந்து கொண்டார். அவர்களது நூல்களையெல்லாம் தவறாது நயீமாவும் வாசிப்பார். இதே போல் இவரது வாசிக்கும் ஆர்வம் கொண்டவர். இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய அறிவைத் தனது பாட்டியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

பாடசாலையில் கற்கும் பொழுதிலிருந்தே பத்திரிகைகளுக்கு நயீமா அவர்கள் எழுதலானார். இதற்குக் காரணமாக இருந்தவர் பசறை மத்திய கல்லூரியில் தமிழ்ப் பாட ஆசிரியராக இருந்த திரு. ஐ. சாரங்கபாணி என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறார். மட்டக்களப்பைச் சேர்ந்தவரான இவர் நல்ல புத்தகங்களை வாசிக்கவும், வாசித்தவற்றைக் குறித்துக் கொள்ளவும் தூண்டுதல் வழங்கினார். இந்த ஆசிரியரின் வழிகாட்டலுடனேயே நயீமா ஆரம்பத்தில் "தினகரன்" பாலர் கழகத்திற்குத் தனது ஆக்கங்களை எழுதலானார். மேலும் இவ்வாசிரியர் அதிகளவில் பேச்சுப் போட்டிகளையும் கட்டுரைப் போட்டிகளையும் நடாத்திப் பேச்சாற்றலிலும் எழுத்தாற்றலிலும் புடம் போட்டு நயீமாவை மிளிரச் செய்தார்.

பாடசாலைக் கல்வியிலிருந்து நீங்கிய பின்னரும், தனது பேச்சுத் திறனை மேடைகளில் வெளிப்படுத்தினார். மேடைப் பேச்சாற்றலில் சிறந்து விளங்கிய இவர் பொதுக் கூட்டங்களில் இனிமையாகப் பேசுவார். "மீலாத்" விழாக்கள், கலை விழாக்கள், இலக்கிய விழாக்கள் என்பனவற்றைத் தனது பேச்சாற்றலினால் நயீமா அலங்கரித்தார்.

இவை தவிர, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் மாதர் பிரிவின் அகில இலங்கைத் தலைவி யாக இளம் வயதிலேயே பணியாற்றியுள்ளார். தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளில் அப்புத்தளைப் பிராந்திய நிருபராகவும் இருந்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே இவர் "மலைப்பொறி" என்ற சஞ்சிகையில் மாதர் பகுதியைத் தொடர்ந்து நடாத்தி வந்தார். "இளம் தென்றல்" என்ற புனை பெயரிலும் இவர் தனது படைப்புக்களை எழுதியுள்ளார்.

"உன் மகனுக்குக் கல்வி இல்லையாம்! பிரஜா உரிமை வேண்டுமாம்! என எள்ளி நகையாடுகிறார். நாதியற்ற குழந்தைகள் தானே! தலைவிதியென்று உன் வாழ்விற்குக் காரணம் காட்டிக் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் காதகர் வாழ்விற்குப் பலியாகி விட்டாய்! கானக வாழ்விற்குக் காரணமாகி விட்டாய்! பொறுத்தது போதும் என் தாயே! பொங்கி எழுவாயே!" என "மலைப்பொறி" மாதர் பகுதியினூடாக மலையகப் பெண்களை நோக்கி, அவர்தம் விடுதலைக்காகக் கூவியழைப்பவராக நயீமா திகழ்ந்தார்.

இக்கால கட்டத்தில் வானொலியில் தொடர் பேச்சுக்களையும் நிகழ்த்தி வந்துள்ளார். "தமிழ் வளர்த்த முஸ்லிம்கள்", "சிறப்புமிக்க சீறா" எனும் தலைப்புகளில் இவர் நிகழ்த்திய தொடர் பேச்சுக்கள் குறிப்பிடத்தக்கவை.

நயீமா தான் எழுதிக் கொண்டிருக்கும் காலப் பகுதியில் இலங்கையில் வெளிவந்த வெகுஜன இதழ்கள் பெரும்பாலானவற்றில் எழுதியுள்ளதோடு தென்னிந்திய இதழ்களான "தீபம்", "மணிவிளக்கு" ஆகியவற்றிலும் எழுதியுள்ளார். கட்டுரை, கவிதை, சிறுகதை, தொடர் கதை, நாவல் ஆகிய சகல துறைகளிலும் இவர் தனது ஆற்றலை நிறுவியுள்ளார்.

இவரது திருமணம் 1974இல் நடைபெற்றது. திரு மணத்தின் பின்னர் பல பெண்களின் படைப்பாற்றல்கள் முடங்கி விடுவதுண்டு. ஆனால் இவரது எழுத்துப் பணி யும் உயர் கல்வி கற்கும் நிலைமைகளும் திருமணத்தின் பின்னரே முனைப்பெடுக்கலாயிற்று திருமணத்திற்கு முன்னர் நயீமா ஏ.பஷீர்" என்ற பெயரிலும் திருமணத்தின் பின்னர் "நயீமா சித்தீக்" எனும் பெயரிலும் எழுதலானார். ஓர் ஆசிரியரைத் தனது வாழ்க்கைத் துணைவராகக் கொண்ட இவருக்குக் கல்வியையும் இலக்கியப் பணியை யும் தொடரத் தனது துணைவரின் உச்ச ஆதரவும் பங்களிப்பும் கிடைத்தது. இவரது செயற்பாடுகளுக்குத் திருமணம் ஒரு தடையாக அமையவில்லை. இத்தனைக்கும் மத்தியில் இவர் மூன்று புதல்வியருக்கும் அன்புத் தாயாக இருந்து பிள்ளைகளின் தேவைகளையும் நிறைவேற்றியே வந்துள்ளார்.

நயீமா சித்தீக் அவர்களின் படைப்புகளின் பக்கம் இனிக் கண்ணோட்டம் செலுத்துவோம். இவர் 500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். பல்வேறு இதழ்களிலும் வானொலியிலும் இவை வெளி வந்துள்ளன. எழில் கொஞ்சும் மலையக மண்ணின் பல்வேறு பிரச்சினைகள் சார்ந்தும் இவர் பல கட்டுரை களை எழுதியுள்ளார்.

கவிதைத் துறையிலும் இவர் தனது பங்களிப்பைச் செலுத்தி உள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட இவரது கவிதைகள் வானொலியிலும் வார இதழ்களிலும் சஞ்சிகைகளிலும் இடம் பெற்றுள்ளன. வானொலி "இளைஞர் மன்றம்" மற்றும் கவியரங்குகளிலும் பங்கு பற்றியுள்ளார். "இளம் தென்றல்" என்ற புனை பெயரிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. நயீமாவின் கவிதைகள் எழுச்சிச் சிந்தனைகளுடன் சமகாலப் பிரச் சினைகளை அடியொற்றியும் எழுதப்பட்டுள்ளன எனலாம்.

"நல்லவை செய்திட நல்லவை எண்ணிட
நல்லவை வளர்ந்திட வேண்டும்!

அல்லவை அழிந்திட அல்லல்கள் தீர்ந்திட
எல்லோரும் முனைந்திட வேண்டும்"

என "இளம் தென்ற" லாக இருந்து நயீமா பிரகடனம் செய்கிறார்.

"மங்கை" என்ற மாசிகையில் "காலவெள்ளம்" எனும் தொடர்கதையை எழுதியுள்ளார். கால வெள்ளத்தின் ஒரு பகுதி இவ்வாறு நகர்ந்து செல்கிறது:

மாலை மயங்கி மந்த மாருதம் தன்னிச்சையாய் ஆட்சி செலுத்த ஆரம்பிக்க... மலர்களின் நறுமணம் இன்ப இலாகிரியை அள்ளி வீச... அந்த மண்டபம் விழாக் கோலம் பூண்டு திகழ்ந்தது, காணற்கரிய காட்சியாகத்தான் இருந்தது.

உலகத்தின் எந்த சக்திக்கும் கட்டுப்படாத, கட்டுப்படக் கூடாத மக்கட் சக்தியின் பரிணமிப்பே போல் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது.

ஒலிபெருக்கியின் நாதத்தால் மக்கள் தம் மனதுளெல்லாம் ஏதோ ஒரு வித இன்பமாக ஊற்று", என நகரும் வருணனை பிரபல இந்திய எழுத்தாளர் ஒருவரின் படைப்போ! என ஒருகணம் திக்குமுக்காட வைக்கிறது. இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளை இவர் எவ்வாறு உள்வாங்கியுள்ளார் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

நயீமா சித்தீக் அவர்கள் 260இற்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருந்த போதிலும் "வாழ்க்கைச் சுவடுகள்" எனும் ஒரு தொகுதியையே இதுவரை வெளியிட்டுள்ளார். கல்ஹின்னைத் "தமிழ் மன்றம்" 1987 டிசம்பரில் இச் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டது.

எமது வாழ்வில் தினந்தோறும் சந்திக்கும் பாத்திரங்களே இவரது கதைகளில் கதை மாந்தர்களாக வருகின்றனர். ஹாஜிகள், ஆசிரியர்கள், இளம் ஏழைப் பெண்கள், விதவைகள் ஏழைச் சிறுவர்கள் இளைஞர்கள் உழைப்பாளிகள் எனப்படுபவர். இத்தொகுதியிலுள்ள கதைகளில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளும் வறுமையில் வாடுவோர் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளும் கையாளப்பட்டுள்ளன.

ஒரு கந்தூரி நடந்து முடிகிறது. (இனிமை 1978), உழைக்கப் பிறந்தவன் (சிந்தாமணி 1982), அவள் எடுத்த முடிவு (விடிவு 1979), வாழ்க்கையின் சுவடுகள் (சிந்தாமணி 1981), தன்னையே சுட்டபோது (சிந்தாமணி 1977), அவனுக்கென்று ஓர் ஆசை (சுமதி 1976), நானும் ட்ரிப் போகணும் (கலைமலர் 1978), நேர்மை உள்ளம் (சிந்தாமணி 1986), ஊமைகள் பேசுகின்றனர் (சிந்தாமணி 1979), சின்ன விழிகள் சிரித்தன (தினகரன் 1979) ஆகிய பதினொரு சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இவை வணிக இதழ்களின் எழுதப் பட்டுள்ளவையாக இருக்கின்றன. எனவே, இவை புற வடிவத்திலும் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றிலும் அதிக ஆயாசமின்றி வடிவம் கொண்டுள்ளன.

இவர் தனது சிறுகதைகளில் கையாளப்படும் விடயங்கள் வாழ்வு பற்றிய கற்பனைகளாகவன்றிச் சம்பவங்களாக எம் முன்னே விரிகின்றன. இவரது கதைகள் சிலவற்றில் சீர்திருத்தக் கருத்துக்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன. சில சமூகத்தில் நிலவும் குறைகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் மேலும் சில சீதனம், அநீதிகள், ஒடுக்குமுறைகள், சுரண்டல்கள் என்பவற்றுக்கெதிரான சாட்டையடிகளாகவும் காணப்படுகின்றன. ஆரம்ப காலக் கதைகள் முதல் அண்மைக் காலத்தில் வெளிவந்த கதைகள் வரை இவற்றை நாம் காணலாம்.

"வீடு வந்து சேரும் சிறுபிள்ளை வேளாண்மைகள்" (தினக்குரல் 2000) கதையில் வரும் விதவைப் பெண் ரமீஸர் உதவியையும் நாடிப்போகாமல் தன்மானத்துடன் வாழ்ந்து வருகிறாள். அவளுக்கு நன்றாகத் தைக்கத் தெரியும். அவ்வப்போது சில பெரியவர்களின் வீடுகளுக்கு ரமீஸாவைக் கூப்பிட்டனுப்புவார்கள். அவர்களின் தையல் இயந்திரங்களிலேயே அவர்களுக்குத் தேவையான உடைகளைத் தைத்துக் கொடுப்பாள். அதனால் கிடைக்கும் சொற்ப வருமானம் அவளுக்கும் அவளது மகனுக்கும் உணவளிக்கிறது. அவளுக்கு உதவ ஊரிலுள்ள சில இளைஞர்கள் முன் வருகின்றனர்.

"ரமீஸா தாத்தா, நாங்க யாருமே பெரிய வருமானங்களுள்ளவங்க இல்ல...ஆனா, போன வருஷம் நோன்பில இருந்தே எங்கட இளைஞர் சங்கத்தில உங்களுக்கு உதவணும் என்று தீர்மானிச்சு எல்லாருமா மாசா மாசம் முடிஞ்சதைப் போட்டுச் சேர்த்தோம். இந்த நல்ல நோக்கத்த அல்லாஹ்வும் ஆதரிச்சான். நெனச்சுப் பார்க்க முடியாதபடி பணம் சேர்ந்திரிச்சி. இண்டைக்கு மஹ்ரிபுக்குப் பின் நாங்க மெஷின் எடுத்துக் கிட்டு வர்றோம்", அவர்கள் சென்ற பின்னர்

"அல்லாஹ் தந்த இந்த மெஷினால் நான் சம்பாதிக்கும் போது அதில் மிகக் கொஞ்சத்தையாவது சேர்த்து இன்ஷா அல்லாஹ், அடுத்த வருஷம் இந்தத் தம்பிகள் உதவுகிறவர்களுக்கு நானும் கொடுக்க வேண்டும்..."

என்ற முடிவின் மூலம் வசதி குறைந்தவர்களே வறுமைக்கெதிராக மேற்கொள்ளும் சீர்திருத்தத்தை முன்வைக்கிறார்.

"காலங்கள் மாறும்" கதையில் ரஹீம் தம்பதிக்குப் பெண் பிள்ளைகள் மாத்திரம் உள்ளனர். ரஹீமின் மனைவியின் தம்பியான ஹசன் ஆண்பிள்ளை இல்லாத நிலைமையைப் பயன்படுத்தி அந்தக் குடும்பத்தைப் பல வழிகளிலும் ஏமாற்றுகிறான். இதையறியாத நிலையிலேயே நோய்வாய்ப்பட்டிருந்த ரஹீம் இறந்து போகிறார். ரஹீம் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவரது கடையைக் கவனித்து வந்த ஹசன், ரஹீமின் மரணத்தின் பின்னர் அந்தக் கடையைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிடுகிறான். அப்போது ரஹீமின் மகளான காமிலா கொதித்தெழுகிறாள். "எல்லோருக்கும் சொல்றேன். எனக்கு பிஸ்னஸைச் செய்ய முடியும். இன்டைக்கு உங்க எல்லோர்ட முன்னாலையும் சொல்றேன்... அல்லாஹ் விதிச்ச கட்டுப்பாடுகள் நான் மீற மாட்டேன்.... நீங்க

யாரும் கவலைப்படவே வேணாம். ஆம்புளப் புள்ள களால் மட்டுமல்ல.... பொம்புளப் புள்ளைகளாலும் முடியும் என்பதைக் காட்டுகிறேன்.... ஹஸன் மாமா...தயவு செய்து உங்கட தொழில நீங்க பாருங்க.” காமிலாவின் முடிவில் இன்னொரு சீர்திருத்தக் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.

இவருடைய முதல் நாவலான “வாழ்க்கைப் பயணம்” 1974 நவம்பரில் “வீரகேசரி” வெளியீடாக வெளிவந்தது. இதுவே, இலங்கையில் முஸ்லிம் பெண் ஒருவரால் எழுதி வெளியிடப்பட்ட முதல் நாவலாகக் கொள்ளப்படுகிறது.

இந்நாவலின் கதை ஓர் இளம் முஸ்லிம் பெண்ணின் மனதில் எழும் பல்வேறு உணர்ச்சி நிலைகளை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அழகிய இப்பெண் ஆசிரியையாகத் தொழில் புரிகிறாள் பருவத்தின் பாதிப்பில் காதல் வயப்படலும் ஆண் துணையற்ற வீட்டு நிலைமையும் அவளைச் சுற்றிப் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்து கின்றன. தனக்கென இருந்த ஒரே துணையான தாயையும் இழந்த பின்னர் ஊரை விட்டுச் செல்லும் அவளது நிலையை ஒத்த நிகழ்வுகள் பலவற்றை நாம் கண்டுள்ளோம் எதிர் கொண்டுமுள்ளோம். இறுதியில் வழமையாக நாவல்களில் நாம் எதிர்பார்க்கக் கூடிய முடிவுடன் கதை முற்றுப் பெறுகிறது. பணத்தால் நசுக்கப்படும் ஏழைப் பெண்ணின் உணர்வுகளும் அவள் படநேரும் துயரங்களும் கதை முழுவதும் ஊடுபாவாகப் பின்னியுள்ளது.

இது தவிர வேறு சில நாவல்களை இவர் எழுதியுள்ள போதும் அவை இன்னும் வெளிவர வில்லை.

இலக்கியத் துறையுடன் மாத்திரம் இவரது பணி நின்று விடவில்லை. கல்வித் துறையிலும் பல செயற்பாடுகளை இவர் நிகழ்த்தியுள்ளார்.

க. பொ. த (உ/தரம்) மாணவர்களுக்கான இஸ்லாமிய நாகரிகம் பாடத்திற்காக 1000 வினாக்களும் விடைகளும் கொண்ட நூலைத் தயாரித்து வெளி யிட்டுள்ளார். க. பொ. பொ. த (சா/த) மாணவர் களுக்கான தமிழ் இலக்கியத்திற்காகச் “சீறாப் புராணம்” விளக்கமும் எழுதியுள்ளார்.

ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும் இவரது கல்விப் பணிகள் ஓய்ந்து விட வில்லை. தற்பொழுதும் மாணவர்களுக்காகத் தனது சேவையைத் தொடர்பவராகவே நயீமா அவர்களின் பணிகள் அமைந்துள்ளன.

“வாழ்க்கைச் சுவடுகள்” எனும் நயீமா சித்தீக் அவர்களின் சிறுகதைத் தொகுதியைத் தனது 30வது வெளியீடாகப் பிரசுரித்த கல்ஹின்னை “தமிழ் மன்றம்” தனது 50வது வெளியீட்டை ஒட்டிய “பொன்மலர்” புத்தகத்தில் “தலைசிறந்த முஸ்லிம் பெண்படைப்பாளி” என நயீமாவைப் பதிவு செய்தது.

மலையக இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் தனது படைப்புகளைத் தந்த இந்த ஊவாவின் புதல்வியை 1986 டிசம்பர் 21ம் திகதி ”மலையக இலக்கியப் பேரவை” பொன்னாடை போர்த்துக் கௌரவித்தது.

இவரது பணிகளுக்காக 1987 ஜனவரி 02இல் “இந்துக் கலாசார அமைச்சு, பாராட்டும் பொற்கிழியும் வழங்கியது. மேற்படி அமைச்சு வழங்கிய பாராட்டானது இவரது படைப்புக்களின் வெற்றியையே குறிகாட்டியது எனலாம்.

நயீமா சித்தீக் அவர்களுக்கு 1991 மார்ச் 12ல் “முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் அமைச்சு“ ”நஜ்முல் அதீப் – இலக்கியத் தாரகை” எனப் பட்டமளித்து விருது வழங்கியது. கலைஞர்களைக் கௌரவப்படுத்திய முதல் விழாவிலே இவ்வமைச்சு அவரையும் கௌரவப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

மேலும் 1994 ஜூலை 24ம் திகதி இந்து சமயக் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சும் ஊவா மாகாண இந்து கலாசார, கூட்டுறவு, வர்த்தக, சுற்றுலா, பெருந்தோட்டத் தமிழ்க் கல்விச் சேவைகள் அமைச்சும்




இணைந்து பதுளை நகரில் நடாத்திய சாகித்திய விழாவில் இலக்கியத் துறையில் இவர் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தது. இது இவர் இரண்டாவது முறையாகப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்ட நிகழ்வாகும்.

மலையக மக்களால் அதிகம் நேசிக்கப்பட்ட முஸ்லிம் படைப்பாளி நயீமா அவர்கள் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன.

இங்கு நான் முன் வைத்துள்ளவை இவரைப் பற்றிய மிகச் சுருக்கமான தகவல்களாகவே அமைந் துள்ளன. பல்வேறு துறைகளிலும் இவர் ஆற்றியுள்ள பங்களிப்புகளைப் பற்றித் தனித்தனி நூல்களை எழுத லாம். நூலுருப் பெறாமல் உள்ள இவரது படைப்புகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும். அத்துடன் இந்த மூத்த பெண் படைப்பாளி பற்றிய பதிவுகள் சிறப்பான முறையில் இடம் பெற வேண்டும். இன்றுவரை ஓயாமல் எழுதிவரும் இவரது பணி எதிர்காலத்தில் மிகச் சிறந்த முறையில் பரிணமிக்க வாழ்த்துகிறேன்.

இலங்கையின் தமிழ் இலக்கிய பரப்பில் சிறுகதைத்துறையில் விசாலமான பங்களிப்பைச் செய்தவர். சமுதாய அவலங்களையும் மூட நம்பிக்கைகளையும் தத்ரூபமாக சித்தரிக்கும் இவரது பாங்கு அலாதியானது. மலையகத்தில் சுமார் அறுபது வருட கால இலக்கிய வரலாற்றில் மிகவும் காத்திரமான இலக்கிய பங்களிப்புச் செய்த ஒருசில எழுத்தாளர்களில் நயீமா சித்தீக்கும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். எழில் கொஞ்சும் மலையகத்தின் இலக்கிய வானிலே நீண்ட காலமாக எழுதி வரும் முன்னணி பெண் எழுத்தாளர் முஸ்லிம் பெண் படைப்பாளிடையே தனக்கென தனி முத்திரையை பதித்துக் கொண்ட இவர் ஓய்வு பெற்ற ஆசிரியை மட்டுமல்ல நூல்கள் பல தந்த நூலாசிரியையும் கூட.

“இலக்கிய தாரகை” என சிறப்புப்பட்டம் பெற்றவர். இவர் இலக்கியத்தில் மின்னும் தாரகை மட்டுமல்ல. இலக்கிய சூரியன் என்றே கூறத்தோன்றுகிறது. அந்தளவுக்கு அன்றும் இன்றும் இலக்கிய வானில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். கலாபூஷணம் நயீமா சித்தீக் மலையக பெண்களுக்காகவும் குரல் கொடுத்த மலையக பெண் படைப்பாளி.

”ஈழத்து இலக்கியத்திற்கு தரமான சிறுகதைகளைத் தந்துள்ள நயீமா ஏ.பஷீர் என்ற நயீமா சித்தீக் சமுதாய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு இஸ்லாமிய குடும்ப விமர்சனமாக தனது சிறுகதைகளை எழுதுவார்” என பிரபல இலக்கிய படைப்பாளியும் நாலாசிரியருமான காலஞ்சென்ற செங்கை ஆழியான் சுதந்திரன் சிறுகதைத் தொகுப்பில் இவரைப்பற்றி புகழ்ந்துரைத்துள்ளார்.

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த எழில் கொஞ்சும் சீதள நகரான ஹப்புத்தளையை பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஹப்புத்தளையைச் சேர்ந்த முஹம்மது பஷீர் மரிக்கார் - தாஜ் பீவி தம்பதிகளின் அன்பு மகளாவார்.

ஆரம்ப கல்வியை பண்டாரவளை ஸாஹிரா கல்லூரியிலும் ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரியிலும் கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் பசறை மத்திய கல்லூரியிலும் தொடர்ந்து கற்று சித்தியடைந்தவர். அதனையடுத்து பேராதனை பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமாணிப் பட்டப்படிப்பையும் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் ஊடகத்துறை டிப்ளோமா பட்டத்தையும் கற்றுத்

# கலாபூஷணம் நயீமா சித்தீக் - மலையக பெண் படைப்பாளி

**நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**



தேர்ந்தார்.

1960 களில் 7ஆம் வகுப்பிற் கற்கும் போது கல்வி எனும் தலைப்பில் இவர் எழுதிய முதல் ஆக்கத்தை தினகரன் பத்திரிகை பிரசுரித்தது. அதனைத் தொடர்ந்து கட்டுரைகள் - கவிதைகள்- சிறுகதைகள்- உருவகக் கதைகள்- குட்டிக்கதைகள் நாவல் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் இவர் முனைப்புடன் ஈடுபட்டார்.

இல்லற வாழ்க்கையில் இணைய முன்பு நயீமா ஏ.பஷீர் என எழுதி வந்த இவர் திருமணத்தின் பின்பு நயீமா சித்தீக் என்று தனது பெயரை கணவரின் பெயருடன் மாற்றிக்கொண்டார். 1970 ஆம் ஆண்டில் ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது கணவரான எம். சித்தீக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர். இவரது இலக்கிய பணிகளுக்கு எவ்வித தடையும் போடாது முழுமையான ஒத்துழைப்பைத் தரும் மகா புருஷரும் அவரே. இவருக்கு மூன்று மகள் மார்கள். மூத்த மகள் அவுஸ்திரேலிய "மொனாஸ்" பல்கலைக்கழகத்தின் ஆஸ்பத்திரி நிருவாக அதிகாரி யாக கடமையாற்றுகிறார். இரண்டாவது மகள் ஒரு சட்டத்தரணி.

இவர் தற்சமயம் கட்டார் நாட்டில் தொழில் புரிகிறார். அவ்வாறே இவரது - கடைசி மகள் களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி பயின்றார்.

இவரது சிறுகதைகளை பொதுவாக இலங்கை யின் எல்லாத் தமிழ் வெளியீடுகளும் பிரசுரித்தன. கட்டுரைகள் பல நூற்றுக் கணக்காக வெளிவந்தன. அவ்வப்போது கவிதைகளையும் எழுதியுள்ளார்

ஏழாம் வகுப்பு படிக்கும் போது தினகரன் "பாலர் மலர்" பகுதியில் இவரது "கல்வி" பற்றிய சிறிய ஆக்கம் வெளிவந்தது. இப்பணியே இன்றும் தொடர்கிறது. சிறுமியாக இருந்த போது இவரை வானொலிக்கு அறிமுகப்படுத்தியவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்த அதீப் முஸ்தபா மாஸ்டர் ஆவார். "பாத்திமா நாயகியின் அடிச்சுவடிகள்" என்ற தலைப்பில் இவர் எழுதிய ஆக்கம் இவரின் குரலிலேயே ஒலித்ததாம். அன்று எடுத்து வைத்த அடிதான். பல தசாப்தங்களாக வானொலியில் இவரது குரலை பதிக்கவும் ஆக்கபூர்வமாக எழுதவும் உதவியது. தரம் 9 படிக்கும் போது வானொலி கலைஞர் தேர்வில் தெரிவானார். ஆரம்பத்தில் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதுடன் மாதர் மஜ்லிஸ் 71 - உரைச் சித்திரங்கள்- நாடகங்கள் என்பவற்றை எழுதியுள்ளார். பல வானொலி கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளார்...

இதுவரை இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் பின்வருமாறு:

1. வாழ்க்கைப் பயணம் (1975) - நாவல்
   (வீரகேசரி பிரசுர வெளியீடு)
2. வாழ்க்கைச் சுவடுகள் (1989) - சிறுகதைத் தொகுதி
   (கல்ஹின்னை தமிழ் மன்ற வெளியீடு)
3. வாழ்க்கை வண்ணங்கள் (2004) - சிறுகதைத் தொகுதி
   (உடதலவின்னை சிந்தனை வட்ட வெளியீடு)
4. வாழ்க்கை வளைவுகள் (2005) - சிறுகதைத் தொகுதி
   (மணிமேகலைப் பிரசுரம்)
5. ஆயிரம் வினாக்களும் விடைகளும் - தமிழ் பாட நூல்
6. சீறாப்புராணம் நபி அவதாரப் படலம் - தமிழ் பாட நூல்

இலக்கிய பணிகளுக்காக இதுவரை இவர் பெற்ற பட்டங்கள் விருதுகள்... பரிசுகள்:

1. நஜ்முல் அதீப் (இலக்கியத் தாரகை) 1991 முஸ்லிம் சமயக் கலாசாரத் திணைக்களம்
2. "சிறுகதை செம்மணி" - 2004 சிந்தனை வட்டம்
3. கலாபூஷணம் - இலங்கை அரச விருது 2005கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டது.
4. 2002 அகில உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டுக் கௌரவம்
5. இலக்கிய ஆளுமை விருது - 2013 இல் தெமட்டகொடை வை.எம்.எம்.ஏ. பேரவையும் கொழும்பு தமிழ் சங்கமும் இணைந்து வழங்கியது
6. கொடகே விருது - 2013ஆம் ஆண்டில் கொடகே நிறுவனத்தினால் வழங்கப்பட்டது

இவை தவிர அவ்வப்போது பல்வேறு சந்தர்ப்பங் களில் அரசு, அரச சார்பற்ற அமைப்புக்களால் பொன்னாடை- பொற்கிழி - விருது என்பன வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் எழுதிய "வாழ்க்கைப் பயணம்" என்ற நாவல் அதிகமானோரால் வாசிக்கப்பட்ட பலராலும் பாராட்டப்பட்ட நாவலாகும். வீரகேசரி வெளியீடாக வெளிவந்த இந்த நாவலின் அனைத்து பிரதிகளும் விரைவிலேயே விற்பனையாகிவிட்டன.

இது மகிழ்ச்சிக்குரிய விடயம் தான் ஆனால் தனது பிள்ளைகளுக்கு காட்டுவதற்காவது தனது "வாழ்க்கைப் பயணம்" என்ற நாவலின் ஒரு பிரதி கூட தன் கைவசமில்லையே? என்ற ஆதங்கப்படுகிறார் இந்த படைப்பிலக்கிய வாதி. இந்த நாவலின் ஒரு பிரதியை யாரிடமாவது இருந்து தனக்கு தந்துதவினால் நன்றி யுடையவளாவேன் எனவும் கூறுகிறார்.

"ஒரு குறித்த வட்டத்திலுள்ள எழுத்தாளர்களும் இலக்கியவாதிகளும் சிந்தனையாளர்களும் மட்டுமே நூல்களை வாசிக்கின்றனர். விமர்சிக்கின்றனர். ஒரு புத்தகத்தை எழுதிய நோக்கம் இதுவல்லவே? என்று நினைக்க- ஏன் எழுத வேண்டும் என்ற ஆதங்கம் மேலிடுகின்றது" என்று இவர் கவலைப்படுகிறார்.

ஆமாம் மலையகத்தின் மூத்த படைப்பிலக்கிய வாதியான நயீமா சித்தீக் அவர்கள் தான் எனது மின்னும் தாரகைகள் ஆய்வு நூலுக்கும் உரமிட்ட உத்தமி. அன்னார் எமது இலக்கிய சொத்தாகும். "தனது இறுதி மூச்சு வரை எழுதுவேன்" என்று கூறும் சகோதரி நயீமா சித்தீக் அவர்கள் "இலக்கிய தாரகை" மட்டுமல்ல இலக்கிய உலகின் மின்னும் தாரகையாகும். இவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து இலக்கிய உலகிற்கு மேலும் பல நூல்களை பரிசளிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

எச்.எச்.விக்ரமசிங்க

# மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமை நயீமா ஏ.சித்திக்

*மலையகத்தின் பிரதான நகரங்களாக இருந்தால் என்ன, தோட்ட பெரட்டுக்களம், தோட்ட விளையாட்டு மைதானங்களாக இருந்தால் என்ன, 1960களில் செல்வி நயிமா ஏ. பஷீர் தோன்றாத மேடைகளில்லை. தனது வசீகர தோற்றத்தால், கனிவான பேச்சால் மேடைக்கு அழகு சேர்த்த சௌந்தரவதியாகத் திகழ்ந்தவர்.*

*1960 களில் மலையகத்தில் இயங்கிய மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், இர.சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் இருவரின் ஆலோசனையின் பேரில் ஊவா தோட்டப்புறங்களில் இயங்கிய திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, பாரதியார், பாரதிதாசன் மன்றங்களிலும், நமுணுகுல நாயர் கல்வி நிலையம், தமிழோவியனின் கலைமகள் படிப்பகம் ஆகியவற்றில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். இளம் ஆசிரியையாக துணிச்சலோடு சமுதாய மறுமலர்ச்சிக்கு வேண்டிய கருத்துக்களை தோட்டம் தோட்டமாக கண் தூங்காது, மெய்வருத்தம் பாராது மலைமுகடுகளில் ஏறி இறங்கியவர்.*

*கிழக்கே நமுணுகுல முதல் மேற்கே நக்கில்ஸ் வரையும், வடக்கே ஹேவாஹெட்ட முதல் தெற்கே எட்டியாந்*



தோட்டை வரையும், எந்த மேடையாக இருந்தாலும் இஸ்லாமிய பெண்ணாக இருந்தும் சமூகக் கட்டுப்பாடு களை ஒருபுறம் ஒதுக்கி விட்டு, பொது வெளியில் தனது பாட்டியுடன் மலையக மக்களின் மேம்பாட்டிற்காக உலாவந்த நயிமா ஏ. பஷீரின் சொற்பொழிவுகளை கேட்டு மகிழ்ந்தி ருக்கின்றோம்.

தனது இளமைக்காலத்திலேயே கட்டுரைகள் எழுதி இலங்கை வானொலி பங்களிப்புகளோடு நயிமா ஏ. பஷீர் சமூகப்பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு மலையக பெருந்தோட்டத் தொழிலாளர் களின் மேம்பாட்டுக்காக பணிபுரிந்தார். இவரது எழுத்துக்களில் காணப்பட்ட வேகமும், வீச்சும் பெருந்தோட்ட சமூக மாற்றத்திற்கான எண்ணக் கருவும், மலையக பெண்களின் வாழ்க்கை அவலங் களை தனது மேடைப் பேச்சின் ஊடாக வீறாப்புடன் வெளிக்கொணர்ந்தவர். மலைநாட்டு எழுத்தாளர் மன் றத்தின் பெண் ஆளுமைகளின் முக்கியமானவரான இவர், தன் இளவயதிலேயே வாசிக்கத் தொடங்கி விட்டார். அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று, காத்தான்குடி மத்திய கல்லூரி, பசறை மத்திய கல்லூரிகளில் கல்வியைத் தொடர்ந்து கலைமாணி (பிஏ சிறப்பு) பட்டத்தை பெற்றவர். பசறையில் ஏழாம் வகுப்பு படிக்கும்போது தினகரன், வீரகேசரி பத்திரிகை களுக்கு எழுத ஆரம்பித்தார். தனக்கு தமிழ் கற்பித்த மட்டக் களப்பு வாவிக்கரை வீதியைச் சேர்ந்த ஆசிரியர் ஐ. சாரங்கபாணி வழங்கிய ஊக்கத்தினால் முன்ன எழுத்துத்துறையில் பிரவேசித்தேன் என அவரை நன்றியுடன் நினைவு கூறுகின்றார். மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்ற தொடர்புகள் காரணமாக 1960 களில் மலையக மெங்கும் இடம்பெற்ற இலக்கிய கூட்டங்களில் அறிஞர்களான இர. சிவலிங்கம், எஸ். திருச் செந்தூரன், கண்டி பி.டி. ராஜன் ஆகியோருடன் ஒரே மேடையில் நானும் மகேஸ்வரி கிருஷ்ணனும் உரையாற்றக்" கிட்டியது இறைவன் தந்த வரம் என்கிறார்.

ஏ.பி.வி. கோமஸின் சிபாரிசுடன் அறிமுகமாகிய நயிமா. ஒன்பதாவது வகுப்பில் படிக்கும்போதே இலங்கை வானொலியில் சிறுகதை. நாடகம். உரைநடைச்சித்திரம் என்பவற்றை எழுதியவர் தொடர்ந்து வெளிவந்த செய்தி, சிந்தாமணி, தினபதி பின்னர் தினக்குரல், நவமணி ஆகிய பத்திரி கைகளிலும் தமிழகத்தில் வெளிவந்த தீபம், மணிவிளக்கு ஆகிய சஞ்சிகைக ளிலும் தொடர்ந்து எழுதியவர். 1963 முதல் 1971 வரை மலைநாட்டு எழுத்தாளர் மன்ற செயற்குழு உறுப்பினராக கடமையாற்றிய இவர், 1967 ஆம் ஆண்டு செப்டம்பர் கண்டி நகர மண்டபத்தில் நடந்த புதுமைப் பித்தன் விழாவில் சிறப்புரையாற்றி மஹாகவி பாரதியின் பேர்த்தி திருமதி விஜயபாரதியிடம் பாராட்டைப் பெற்றார்.

நயிமா அப்துல் பா மரிக்கார், டாச் பீபீ என்பவரது மகளாக 1948 இல் பிறந்தார். தனது 20 வது வயதில் மாணவர் ஆசிரியர் பரீட்சையில் தேர்ச்சிபெற்று இளம் ஆசிரியராக இணைந்து, தர்க்கா டவுன் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சியை 1971 இல் பூர்த்தி செய்தார்.

கெலிஓயாவில் சமூகப்பணியில் நீண்ட பின்னணியைக் கொண்ட ஏ.கே. எல்.எம். சித்திக் ஆசிரியரை 12.5.1974 இல் திருமணம் செய்து கம்பளை நகரில் தன் வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தார். அன்று முதல் நயிமா சித்திக் என்று அறியப்பட்ட இவர், கம்பளை சாஹிரா கல்லூரியில் மட்டும் சுமார் 18 வருடங்கள் ஆசிரியராக பணி யாற்றினார். திருமணமாகி, தாயாராகி ஆசிரியர் தொழிலுடன் இன்றும் எழுத்துத்து றையில் ஈடுபடுவதற்கு உறு துணையாக தனது கணவரே காரணம் என்கிறார்.

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அப்புத்தளை விசேட செய்தியாளராக பணியாற்றி தன் எழுத்து வளத்தால் காத்திரமான முத்திரையை பதித்தவர்.



1966 நவம்பர் 12 ஆம் திகதி பெரகலை தோட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவின்போது துணிச்சலோடு சம்பவ இடத்திற்கு சென்று தினபதிக்கு செய்தியாக்கி புகைப்படத்துடன் அது முன்பக்க தலைப்புச் செய்தியாக வெளிவந்தது.. திருமதி சிவபாக்கியம், குமாரவேலுடன் 1960 களில் இணைந்து அவர் இயற்கை எய்தும் வரை பல்வேறு சமூகப் பணிகளோடு "மங்கை" என்ற இதழையும் நடாத்தியவர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஏ. அஸீஸ், நயிமாவின் ஆளுமைமிக்க பண்புகளை அடை யாளம் கண்டு தமது தொழிற்சங்கத்தின் மாதர் அணிக்கு தலைமை தாங்குமாறு அழைத்தார்.

நயிமாவும் அப்பதவி யில் திருப்திகரமாக செயற் பட்டு நற்பெயரை பெற்றார். சுகந்திரமுக் அந்தனி ஜீவா தொகுத்த 25 பெண் எழுத்தாளர்களின் "அம்மா" என்ற சிறுகதைத் தொகுதியில், பரணீதரன் தொகுத்த "ஜீவநதி சிறுகதைகள்" தொகுதியில், "சுதந்திரன்" சிறுகதை தொகுதி யில் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளன.

நயீமா சித்தீக்

# நானும் என் எழுத்துக்களும்

நினைத்துப் பார்க்கின்றேன்.....

ஓ..எத்தனை நினைவுகள் எத்தனை உணர்வுகள்

ஆச்சரியம்.....

ஆனந்தம்......

பயமுறுத்தல்கள்......

வாழ்த்துக்கள்......

வசைகள்.......

எல்லாவற்றையும் நினைத்துப் பார்ப்பது ஒரு சுக அனுபவம் தான்!

நான் எழுதத் தொடங்கியது எதேச்சையானதா? என்னுள்ளேயே புதைந்து கிடந்த ஆர்வத்தின் உந்துதலா?

எனக்கே விடை தெரியவில்லை. வாசிக்கத் தெரிந்த காலம் முதலே கல்கி, ஆனந்த விகடன், தீபம் என்று தரமான இந்திய வார இதழ்கள் ஒவ்வொரு வியாழனும் எங்கள் வீடு தேடி வரும். பாட்டிக்காக வாசித்துக் காட்ட வேண்டும். என் தாயார் கண்டது கற்ற ஒரு பண்டிதை. அவர் வாசிக்காதவைகளே இல்லை.



நினைத்துப் பார்க்கின்றேன்... கல்கியையும், ஜெயகாந்தனையும், லக்ஷ்மியையும், கி.வா. ஜகன்னாதனையும், அகிலனையும் எனக்குச் வீட்டைவிட்டு வெளியே சொல்லித் தந்தவரே, எனது தாயார் தான். செல்லாத எட்டாம் வகுப்பே கல்விகற்ற அதுவும் ஆங்கிலமொழி மூலம் கற்ற அவரை இன்று நான் நினைத்துப் பார்க்கின்றேன். அவருக்குள் முகிழ்ந்திருந்த இலக்கிய ஆர்வம் முழுமையாக என்னிடம் இல்லை என்றே நான் நினைக்கின்றேன். வாசிப்பதோடு அவர் நிறுத்துவதில்லை. சிறந்த விமர்சனமும் செய்வார்.

கம்பளை மண்ணில் முளைத்த விதை நான் என்பதால் இறைவன் எனக்கு இலக்கிய ஆர்வத்தைத் தந்திருக்கலாம். இப்படித்தான் நான் நினைக்கின்றேன்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்ற போது எனது தமிழ் புடம் போடப்பட்டது. விடுதி வசதி காரணமாகப் பசறை மத்திய மகா வித்தியாலயத்திற்கு பாக்கியங்களைத் தந்தான்.

நான் வந்ததும் இறைவன் எனக்குச் சில விடுதியைச் சுற்றித் தேயிலைத் தோட்டங்கள், பல்வேறு வேலை செய்யும் தொழிலாளர்கள், தமிழ்ப் பிரிவு பகல் ஒருமணிக்குப் பின்னரே ஆரம்பமாவதால் காலையில் கிடைக்கும் தனிமை... ஆர்வத்தைத் தூண்டிய மதிப்பிற்குரிய மட்டுமாநகர் ஆசிரியர் திரு. ஐ. சாரங்கபாணி அவர்கள்...

இப்போது என் இலக்கிய வாழ்வில் ஒளி பிறக்கத் தொடங்கியது.

“கல்வி” என்ற கட்டுரையைத் தினகரன் பாலர் மலருக்கு அனுப்ப உடனடியாக அது பிரசுரமானது. அந்த மகிழ்ச்சியை அளவிடவும் முடியுமோ? பாடசாலை பேசவும் விவாதிக்கவும், எழுதவும் தாராளமான களமமைத்தும் தந்தது. பேசினேன், எழுதினேன்,

விவாதித்தேன், நடித்தேன்.

ஆசை தீர..... ஆசை தீர.... அனைத்தும் செய்தேன். அப்படியொரு பாடசாலைச் சூழலிலே படிக்கக் கிடைத்த நான் ஒரு பாக்கியசாலிதான்!

பசறை கலைமகள் படிப்பகத்தை நடத்தி வந்த திரு. தமிழ்மணி தமிழோவியன் அவர்கள் ஒரு கட்டுரைப் போட்டி நடத்தினார். உடனடியாகத் தலையங்கம் தரப்பட்டு.... உடனடியாக எழுத வேண்டும்.... மத்திய பிரிவில் முதற்பரிசு எனக்கு. தூக்க முடியாத அளவு புத்தகப் பரிசில்களையும், சான்றிதழையும் விடுதிக்கு எடுத்து வந்த போது எந்தப் பேதமும் இல்லாமல் விடுதியில் இருந்த அத்தனை சிங்களச் சகோதரிகளும் என்னை வாழ்த்தி, கௌரவித்ததை இன்றும் நினைக்க நான் மகிழ்ச்சி... அடைகின்றேன். அந்த இனிமையான நாள் மீண்டும் நம் நாட்டில் என்று வரும்?

போடசாலையை விட்டு விலகியதும் நான் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் பெண்கள் பிரிவைப் பொறுப்பேற்றேன். எவ்வளவு பெரிய பதவி... எனக்கோ பதினேழு வயது கூட இல்லை. இப்போது நினைத்தால் அது அசட்டுத் தைரியமாகவும் படுகிறது. மலையகம் முழுவதும் சுற்றினேன். மலையக மக்களின் துயரங்களை நேரிற் கண்டேன். எழுதினேன்.

எனது முதற் சிறுகதையை மாத்தளை திரு. A.P.V.கோமஸ் அதிபர் அவர்கள் சிபாரிசு செய்து தினபதியில் வெளியிட உதவினார். தொடர்ந்து ”சிந்தா மணி நான் அனுப்பிய ஒரு சிறுகதையைக் கூட நிராகரிக் காது வெளியிட்டதை நான் சுக நினைவுகளாகக் கொண்டுள்ளேன். நூற்றுக் கணக்கான சிறுகதைகள் சிந்தாமணி, வீரகேசரி, சுதந்திரன், சுமதி போன்ற பத்திரிகைகளிலும், அநேகமாக ஈழத்தின் எல்லா சஞ்சிகைகளிலும், தீபம், மணிக்குரல் போன்ற இந்திய சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. ஆரம்ப காலத்தில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அப்புத்தளை நிருபராகவும் இருந்தேன்.

மலையக மக்களோடு கொண்டிருந்த தொடர்பு காரணமாக அவர்களின் கல்வி நிலையை உயர்த்த “அசோகா கல்லூரி” என்ற ஒரு பாடசாலையை நிறுவிச் சிறப்பாக நடத்திய அனுபவமும் உண்டு. முதன் முதலாக “பாத்திமா நாயகியின் அடிச்சுவட்டில்....” என்ற வானொலிப் பேச்சை எழுதி அனுப்பினேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் ஒலிப் பதிவுக்கான நேரம் குறிப்பிட்டுக் கடிதம் வந்தது. எந்தவித அச்சமோ, கலவரமோ இல்லாமல் எனது பாட்டியோடுதான் வானொலி நிலையத்தில் முதன் முதலில் அடியெடுத்து வைத்தேன். ஜனாப். Z.L.M.முஹம்மத் மௌலவி அவர் கள் ஒலிப்பதிவு செய்து என்னை ஊக்கப்படுத்தினார். அந்த உரையை வானொலியில் கேட்ட போது என் குடும்பமே மகிழ்ந்தது. அது எனது பதினாறாவது வயதில். தொடர்ந்து பல்வேறு வானொலிக் கலைஞர் தேர்வில் வெற்றி பெற்றேன். விதமான நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கு பற்றினேன்.

“சிறப்புமிக்க சீறா” ”தமிழ் வளர்த்த முஸ்லிம்கள்” ஆகிய தொடர்ப் பேச்சுக்களை நிகழ்த்தினேன். ஆரம்பத்தில் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய நான் பின்னர் பிரதிகளை எழுதத் தொடங்கினேன். உரைச் சித்திரங்கள், நாடகங்கள் என்பனவும் எழுதினேன்.

1974ல் எனது முதலாவது நாவல் ”வாழ்க்கைப் பயணம்” வீரகேசரி வெளியீடாக வெளிவந்தது. நான் அறிந்தவரையில் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர் களில் எனது நாவல் தான் முதலில் வெளிவந்திருக்க வேண்டும்.

1987ல் வாழ்க்கைச் சுவடுகள் சிறுகதைத் தொகுப்பை கல்ஹின்னை தமிழ்மன்றம் வெளியிட்டது.

1986ல் மலையக கலை இலக்கிய மன்றமும்,

1987ல் ஜனவரியில் இந்து கலாசார அமைச்சும்,

1994ல் ஊவா மாகாண தமிழ்மொழி அமைச்சும்,

1991 மார்ச்சில் இஸ்லாமிய சமய, கலாசார அமைச்சும்,

2002ல் அகில உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டுக் குழுவும், 2002 டிசம்பரில் யாழ் பல்கலைக் கழகமும்

என் சேவையைப் பாராட்டி பொன்னாடைகள் போர்த்தியுள்ளது. பொற்கிழி அளித்தும் கௌரவித் துள்ளன. அல்ஹம்துலில்லாஹ்.

என் எழுத்துப் பாதையில் கற்களும் முட்களும் காலிற் குத்தியதும் உண்டு.

ஆரம்பத்தில் அப்புத்தளையில் நான் பிரமாண்டமான “வள்ளுவர் விழா” வை ஏற்பாடு செய்த போது அறியாமையால் ஒருசிலர் என்னையும் என் குடும்பத்தையும் பொலிஸ் நிலையம் வரை கொண்டு சென்றனர்.

நினைத்துப் பார்க்கின்றேன்.....

சிலரைச் சுடுகின்ற சில சிறு கதைகள் வந்தால் மொட்டைக் கடிதங்கள் வரும். ஆனால் இவற்றை யெல்லாம் “கண்டு கொள்ளாத” ஒரு மனப்பக்குவத்தை இறைவன் தந்தான். அவனுக்கே நன்றிகள். என் எழுத்துக்கள் என்னுள் விளைந்த பாதிப்புக்களின் விளைவுகளே.

என்னைச் சுற்றியுள்ளவர்களை நான் நேசிக் கின்றேன். அவர்களது வாழ்க்கைப் பாதிப்புக்களை நான் யோசிக்கின்றேன். இந்த அவலங்களுக்கெல்லாம் தனி யொருத்தியால் என்னால் தீர்வு காண முடியாது. ஆனால், சமூதாயத்தின் முன் இப் பிரச்சினைகளை இனங்காட்ட முடியும். இந்த இனங் காட்டலே என் எழுத்துக்கள்.

என் எழுத்துக்கள் சிலரிடமாவது ஒரு பாதிப்பை ஏற்படுத்தி சிந்தனையைத் தூண்டி விடுமானால் அதுவே எனக்கு ஆத்ம திருப்தி. மானிடத்தை நேசித்து, மானிடப் பிரச்சினைகளை மனித நேயத்தோடு பகிர்ந்து கொள்ள – பயனுள்ள வகையில் என் எழுதுகோலைப் பயன்படுத்த அருள் செய்வாய் இறைவா. இதுவே என் இதயப் பிரார்த்தனைகள்.

# நயீமா சித்தீக் இலக்கியச் சுவடுகள்

**திக்குவல்லை கமால்**

*1960 ல் தினகரன் "பாலர் மலரி" இல் "கல்வி" என்ற சிறு ஆக்கம் மூலம் பன்னிரண்டு வருட பள்ளி மாணவி நயீமா தனது முதலாவது இலக்கியச் சுவட்டைப் பதித்தார். அந்த தசாப்தத்தின் பிற்கூற்றில் பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதி பலரதும் கவன ஈர்ப்பைப் பெற்றார். தொடர்ந்து தேசியப் பத்திரிகை களில் மட்டுமன்றி, மலையகப் படைப்பாளிகளின் அடையாளமான க.ப.சிவத்தின் "மலைமுரசி"லும் எழுதியமை குறிப்பிடத் தக்கது. கண்டியிலிருந்து வெளியான "மங்கை" சஞ்சிகையின் துணையாசிரியை யாகவும் செயற்பட்டார். "தீப்பொறி" யிலும் பெண்கள் பகுதிக்கு பொறுப்பாக இருந்தார். தமிழக இலக்கிய சஞ்சிகையான நா.பார்த்சாரதியின் "தீபம்" இதழிலும் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. "தினபதி – சிந்தாமணி" பத்திரிகைகளில் செய்தியாளராகவும் இயங்கியுள்ளார்.*

*பதுளை அப்புத்தளையை பிறப்பிடமாக் கொண்ட இவர், பசீர் மரைக்கார் – தாஜ்பீபி தம்பதியின் புதல்வியாவார். ஆரம்பத்தில் நயீமா ஏ.பசீர் என்ற நாமத்தில் எழுதிவந்த இவர், திருமணத்தின் பின்னர் நயீமா சித்தீக் என்று தன் பெயரை மாற்றிக் கொண்டார்.*

*பண்டாரவளை ஸகிறா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விகற்ற இவர் ஐந்தாம்தர புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தார். காத்தான்குடி மத்திய கல்லூரி, பசறை மத்திய கல்லூரி போன்றவற்றில் கல்வி கற்று 1970 ல் ஆசிரிய நியமனம் பெற்றார். பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையாக ஓய்வு பெற்றார். ஆசிரிய வாழ்க்கை கலாபூஷணம் நயீமா சித்தீக்கின் இலக்கிய வாழ்வுக்குத் துணை நின்றதோடு, இவர் மாணவர் சமுதாயத்துக்கு ஆதர்ஷமாகவும் திகழ்ந்துள்ளார். கெக்கறாவ ஸஹானா கம்பளை ஸாகிறாவுக்கு உயர்*




*தரம் கற்கச் சென்றபோது அங்கு நயீமாஆசிரியையைச் சந்தித்து அன்பையும் வழிகாட்டலையும் பெற்றதாக ஒரு சமயம் தெரிவித்தார்.*

*நயீமா சித்தீக் மலையகச் சூழலில் வாழ்ந்தவர். தோட்டத் தொழிலாளர்களின் கஷ்டநஷ்டங்களை*

கண்டறிந்தவர். அவர்கள் எவ்வாறெல்லாம் சுரண்டப் படுகிறார்கள் என்பதை விளங்கி மனம் நொந்தவர். இவை அவரது எழுத்துக் களில் பிரதிபலித்ததோடு பேசு பொருளாகவும் மாறியது.

இவரது திறமைகளை அவதானித்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஏ.அஸீஸ் இவரோடு தொடர்புகொண்டு தனது தொழிற் சங்கத்தின் மாதர் பிரிவுத் தலைவியாக நியமித்தார். துணிச்சலுடன் அவர் மேடைகளில் பேசலானார். உரிமைக் குரல் எழுப்பினார். இவருக்கு மேலும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. மலையகச் சிறுவர்களின் கல்விக்காக வேலைத் திட்டங்கள் வகுத்து நடைமுறைப்படுத்தினார். காலப்போக்கில் மீனாட்சியம்மால் நடேசையர் முதல்... கோகிலம் சுப்பையா, சிவபாக்கியம் குமாரவேல், லலிதா நடராசா போன்றோர் வரிசையில் இணைந்து கொண்டார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையும் இவரை விட்டுவிடவில்லை.எழுத்தாளராகவும் மேடைப் பேச்சாளராகவும் ஆசிரியையாகவும் பன்முகச் செயற்பாட்டாளரான நயீமா சித்தீக்கின் சமுதாயப் பங்களிப்புக்காக வானொலி ஊடகத்திலும் சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொடுத்தனர்.


நாடகம் - உரைச் சித்திரம் - கவிஞர் மன்றம் - மாதர் மஜ்லிஸ் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் தொடர்ச்சியாக பிரதி மூலமும் நேரிலும் பங்கு கொண்டார்.

இதுவரை இவரது நான்கு புனைகதை நூல்கள் வெளியாகியுள்ளன. முதலாவது நூல் வீரகேசரி வெளியீடு "வாழ்க்கைப் படகு"(1975) என்ற நாவல். அதைத் தொடர்ந்து கல்ஹின்னை தமிழ் மன்றம்

" வாழ்க்கை சுவடுகள்"(1989) , கண்டி சிந்தனை வட்டம்" வாழ்க்கை வண்ணங்கள்"(1989), தமிழ் நாடு மணிமேகலைப் பிரசுரம் "வாழ்க்கை வளைவுகள்"(2005) முதலான நூல்களை வெளியிட்டன.எல்லா நூல்களும் "வாழ்க்கை" என்றே ஆரம்பிக்கின்றன.நயீமாவின் ஆக்கங்கள் வாழ்க்கை பற்றிய விமர்சனங்கள்தான். மிகச் சாதாரணமான விடயங்களை மிகக் கவனமாகக் கையாளுவதில் வல்லவர்.

இவற்றுக்கு அப்பால் மாணவர்நலன் கருதி பாடத் திட்டத்திற்கு இயைந்த நூல்களையும் வெளிக் கொணர்ந்துள்ளார். "ஆயிரம் வினாக்களும் விடை களும்", "சீறாப் புராணம் நபி அவதாரப் படலம்" போன்ற நூல்களையும் குறிப்பிடலாம். பல தொகை நூல் களிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அந்தனி ஜீவா தொகுத்த 25 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பிலும் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது.

கொடகே இலக்கிய விழாவின்போது இவரது சேவையைப் பாராட்டி கௌரவித்ததோடு, "வாழ்கைச் சுவடுகள்" என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு உபாலி லீலாரத்னவினால் "ஜீவன சடன" என்ற பெயரில்




மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. மேலும் இவரது கதைகள் சிலவற்றை ஜீ.ஜீ.சரத் ஆனந்த மொழி பெயர்த்து "லங்கா" பத்திரிகையில் வெளியிட்டார். நயீமாவின் "அவள் சீதனத்துக்காக உழைக்கிறாள்" என்ற கதை அவரது "மல்தம் பலந்தன்னோ" என்ற தொகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2002ல் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது "இலக்கியத் தாரகை" நயீமா சித்தீக் சிறப்பான முறையில் கௌரவிக்கப் பட்டதையும் இங்கு ஞாபகமூட்டாமல் இருக்க முடியாது.

நயீமா சித்தீக் எழுதமுன்னே முஸ்லிம் பெண்கள் இலக்கியத் துறையில் ஈடுபட்டதுண்டு தான். ஆனால் நயீமா சித்தீக் இடைநிற்காமல் தொடர்ந்து இலக்கியச் சுவடுகளை இன்றுவரை பதிவு செய்து கொண்டிருப்பதே இவரது சிறப்பு எனலாம்.

பெண் பிள்ளைகளின் பேச்சுத்திறன் பாடசாலைப் பேச்சுப் போட்டிகளுடன் நின்றுவிடும் காலகட்டத்தில் மேடைகளில் முழங்கிய துணிச்சலும் இவரை முதன்மைப்படுத்தி நின்றது. பல்கலைக் கழக மட்டத்திலும் இவரது எழுத்துக்கள் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

நயீமா சித்தீக் என்றும் போற்றுதலுக்குரிய ஆளுமை என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.




# நயீமா சித்தீக்கின் வாழ்க்கை வண்ணங்கள்

**பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்**

மனிதப் பிரச்சினைகள் தான் கலை, இலக்கியங்களின் மாறாத கருப்பொருள்கள். முழுமையான அழகியல் திருப்தி கலை, இலக்கியங் களின் வடிவ ஒழுங்கிலிருந்து மனதை ஆகர்ஷிக்கிறது. ஏதாவது ஒரு ஒழுங்கில் வடிவக் கட்டமைப்பைப் பெறாத ஒன்று கலைவரையறைக்குள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இரண்டும் சம அளவில் இணைந்து செல்வது மனித நேயத்தை உள்வாங்கிய மிகப் பெரும் படைப்புக்களை உருவாக்கும் முடிவை எட்டுகிறது. மார்க்ஸிம் கோர்க்கி, புதுமைப்பித்தன் ஜெயகாந்தன்களை நாம் இவ்வாறு பார்க்க முடியும். கலைக்காக என்ற கருத்து நிராகரிக்கப்படக்கூடியதல்ல. வடிவ ஒழுங்கில் நேர்த்தியை அது கட்டாயமாகக் கோருகிறது. கலை என்பதற்குள் அடங்கியுள்ள அழகு என்ற எண்ணத்தை எப்படி நிறைவுள்ளதாக்கலாம். என்ற பிரச்சினையை அது ஆழமாக கருத்திற் கொண்டுள்ளது. மனிதப் பிரச்சினைகளும் மனித உணர்வுகளும் நிராகரிக்கப்படும் எல்லைக்கு அது செல்வதை இஸ்லாமிய கலைநோக்கு அங்கீகரிக்கவில்லை. மகாகவி அல்லாமா இக்பால் இதனை விரிவாக ஆராய்ந்துள்ளார். அவரது இலக்கியங்களிலேயே அவர் இதைச் சாதித்தும் காட்டினார். உருது, பாரசீக ரஸஞான மரபின் மிக உயர்ந்த அழகியல் பிறப்பிற்குள் மனித நேயத்தையும், முஸ்லிம் பண்பாட்டு நெருக்கடிகளையும் இக்பால் கவிதையாக்கினார்.

தமிழில் சிறுகதைக்கென்ற வளர்ச்சியடைந்த கலைமரபு உள்ளது. புதிய பாணிகளும் தோன்றி வருகின்றன. முஸ்லிம் கதாசிரியர்கள் இஸ்லாமிய கலை நோக்கத்தையும் சிறுகதை மரபின் அழகியல் வெளிப்பாட்டையும் சிந்திப்பதன் மூலம் தமது கலைப் படைப்பின் நேர்த்தியை சிறந்த ரஸனை மட்டத்திற் குரியதாக்க முடியும். 1960களில் ஆரம்பமான நயீமா சித்தீக்கின் சிறுகதைப் படைப்புக்களில் காணப்படும் முன்னேற்றங்கள் இத்தகைய இலக்குகளை வெற்றி காண முயல்வதாக அவர் இலகுவாகக் கடந்து விடுகிறார். கலையும் அழகும்பற்றி முதற்பகுதியில் தரப்பட்டுள்ளது. இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு பேசப்பட்டவை யாகும்.

கதைகள் அவற்றிற்குரிய புவியியல் பண்பாட்டு நிகழ்வுக் களங்களில், தாய்தந்தையரின் கவலை தோய்ந்த உரையாடல்களாக, இளம் பெண்களின் ஏக்கங்களாக, தாய்மார்களின் உணர்வலைகளாக, ஓரிருசம்பவச் சேர்க்கைகளோடு, குறித்த பிரச்சினையை மையப்படுத்தி தனக்கே உரித்தான கதைகூறும் பாணியின் கதைகளை நயீமா நகர்த்திச் செல்வதில் ஒரு ரசனை மனதைக் கவர்கிறது. நயிமா சித்தீக் புகழ்பெற்ற பெண் புகழ் பெற்ற பெண் எழுத்தாளர் அவர் மலையகத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரை மலையக எழுத்தாளர் என்று மலையக இலக்கிய உலகம் கூறிப் பெருமையடை கின்றது. அவர் ஒரு முஸ்லிம் பெண் எழுத்தாளராவார். இலங்கையில் 1940களில் ஆரம்பமான முஸ்லிம் பெண் எழுத்தாளர் பரம்பரையில் இவர் மூன்றாம் தலைமுறைக் குரியவர். 1960களில் இவர் எழுதத் தொடங்கினார்.


இத்தொகுதியிலுள்ள கதைகள் மலையகத்தின் முஸ்லிம் பண்பாட்டு மையங்களில் ஒன்றான உடுநுவரையையே பெரும்பாலும் கதைக்களமாகக் கொண்டுள்ளன. உடுநுவரை மக்களின் பேச்சுவழக்கு ஆங்காங்கே கதைகளுக்கு அழகு சேர்க்கின்றன. கதைக் களங்கள் கம்பளை, உடுநுவரைகளாக இருந்த போதும் இங்கு கூறப்படும் கதைகள், கதை மாந்தர்கள், சீதனப் பிரச்சினைகள், பொதுத்தன்மை பெற்றவை ஏனைய பல பிரதேச மக்களின் வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியவை சீதனம் மட்டும் பிரச்சினையல்ல. அதனுடன் சேர்ந்து

இயங்கும் ஏற்பாடுகள். பேராசை ஏமாற்று, நம்பிக்கை மோசடி, சாதாரண மனித உணர்வுகளுக்குக் கூட மதிப்பளிக்காத குரூர மனப்பான்மை இவைகளும் பேசப்படுகின்றன. நீதியும், நேர்மையும் செயல்படாத ஒரு நிலைமை தான் சீதனத்தைவிடக் குடும்பங்களை மோசமாக நிலைகுலையச் செய்வதை இக்கதைகளில் சில உணர்த்துகின்றன.

போக்கு அவரது கதைகளில் கண்டிக்கப் படுகிறது திருமணம் வர்த்தகத்தைப் போலாகிவரும் ஒரு தவறான சமூகம் என்று இதை இன்னொரு வகையில் கூற முடியும். சீதனம் கைமாறப்படாத மார்க்க ரீதி யானது என்று கூறிக் கொள்ளப்படும் திருமணங் களிற்கூட இவ்வர்த்தக மனப்பாங்கு குடும்ப உறவுகளை உடைத்தெறிகிறது. சீதனம் வேண்டாம் எங்களுக்கு உங்கள் சம்பந்தமும், மணப்பெண்ணும் மட்டும் போதும் என்று மணம் செய்து கொண்டவர்கள் குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்கும் போது நீ வெறுங் கையுடன் வந்தவள் தானே" என்று அவளை அவமானத் திற்குள்ளாக்கும் அவலத்தையும் நயீமாவின் கதைகள் கூறுகின்றன.

ஆனால் சீதனம் ஒழிக்கப்படல் வேண்டும் என்பதைவிட, அதற்குமுன்னர் சீதனத்தின் பேரில் இயங்கும் ஷைலாக்" மனப்பான்மைதான் அழிக்கப்படல் வேண்டும் என்ற கருத்தையே நயீமா ஆழமாக வற்புறுத்துவதாகக் கருதலாம். சீதனம் வாங்காது திருமணத்தின்பின் குத்திக்காட்டிப் பேசிப் பெண்ணைத் துன்புறுத்துவோரை விட. மார்க்க இயக்கங்களில் தமது நல்ல பெயர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மறைவாகச் சீதனம் வாங்குவோரைவிட நாலு பேர் சாட்சியாக சீதனம் வாங்கி. பெண்ணைப் பாதுகாப்பாக வும் கௌரவமாகவும் வாழவைப்பவன் எவ்வளவோ மேல் என்று அவரது கதாபாத்திரம் ஒன்று கூறுகிறது. சீதனத்தை ஒழிப்பதற்கு முன்னர் மனிதாபிமானத்தை யும் ஞாய உணர்வுகளையும் இதற்குள் கொண்டுவர முடியாதா என்ற கவலை இங்குள்ள பல கதைகளில் மெல்லிய குரலாக ஒலிப்பதைக் காண முடியும். இதற்கு சமய போதனைகள் உதவியாக அமையலாம் ஆனால் பொதுவான ஒழுக்க வாழ்வுச் சிந்தனைளை சமூகம் அறியக் கடமைப்பட்டுள்ளது. நியாயம், மனிதாபிமானம். பரிவு என்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பற்றிய கலந்துரையாடல்களாகவும் ஒழுக்கச் சிந்தனைகள் மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். நயீமாசித்தீக்கின் இக்கதைமுயற்சியும் அதற்கான ஒரு பிரவேசம் என்றே கொள்ளலாம்.

சீர்திருத்த நோக்கு கதாசிரியரின் எண்ணங் களில் வேரூன்றியிருந்த போதும் கதை வார்ப்புக்களில் அதன் அழுத்தம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். உடுநுவர முஸ்லிம் களின் குடும்ப உறவுகளும், வாழ்வியல் அம்சங்களும், ஆங்காங்கே வெளிப்பட்டு கதைகளின் பண்பாட்டுத் தளத்தை அழகுபடுத்தியுள்ளன. பெண் வீட்டாரிட



மிருந்து சொத்துக்களை முடிந்தவரை கவரத் துடிப்பவர்களைப் பற்றிய கதைகளே அதிகமிருந்தாலும் இஸ்லாமிய கொள்கைகளுக்கேற்ற சித்தீக்

விதத்தில் அல்லது தியாக உணர்வோடு தமது திருமண வாழ்வை. அமைக்க முன்வரும் "தொடரும் இலட்சியங்கள்" கதையில் நியாஸ் செல்வம். அழகு எதையும் பார்க்காது நற்பண்புகளுக்காக மட்டும் ஏழைப் மணமுடிக்கும் லாஹிர் சவூதி மாப்பிள்ளை கமாலினால் பெண்ணை அவனது தந்தை புவாட் ஏமாற்றப்பட்ட பஸீனாவுக்கு வாழ்வுதரும் அஸ்லம் அதற்கு ஆதரவளிக்கும்.

போன்றோரின் உயர்தர பண்புகள் நம்பிக்கை யூட்டும் தூரத்து ஒளிக்கீற்றுகளாக மின்னுகின்றன.

கற்பனை என்று கூறப்பட்டாலும் இவை உண்மைகள். பிரச்சினை களைக் கலையாகத்தரும் ஒரு பணியில் நயீமா சித்தீக்கின் முயற்சி என இதை வர்ணிக்கலாம். இது இலக்கிய வடிவமாகத் தரப்படுகிறது. ஓவியமாகவும். சினிமாவாகவும் இது சொல்லப்படலாம். பிரச்சினைகளின் அழுத்தத்தையும் அதன் அதிர்ச்சி களையும் காட்டுவதற்குக் கிடைக்கும் இலக்கியத்திற்கும். நாடகத்திற்கும். சினிமாவிற்கும் இருக்கும் சக்தி அளப் பரியதாகும். கலைகள் அழகுணர்ச்சிக்கு மட்டுமானது அல்ல. சிந்தனைகளைத் தூண்டும் ஆற்றலும் அவை களுக்குள்ளன. "சொர்க்கத்துச் சிறுவர்கள்", "ஒஸாமா" போன்ற ஈரானிய திரைப்படங்களைப் பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை மேலும் புலப்படும்.

நயீமா சித்தீக்கின் இலக்கியப் பணி நன்கு தொடர என் வாழ்த்துகள்.

# வெறி

நயீமா சித்தீக்



இதயம் நிரம்பிய பலவித எண்ணங்களுடன் வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தான் ரஹீம். நடையிலே ஒருவித மந்தம். அது இதயத்தின் தன்மையை வெளிப்படுத்துகிறதா?

பழக்கப்பட்டுப் போன கால்கள் வீடு நோக்கிச் செல்கின்றன.

"டொக்.....டொக்...."

"யாரது-?" ஆச்சரியத்துடன் வெளிப்பட்டது. இந்நேரத்தில் அவன் வரமாட்டான்.

"நான் தான்"

"ஆ...... நீங்களா....?"

கதவு திறக்கப்பட்டது

"ஏன் இவ்வளவு விரைவாக வந்து விட்டார்" மனம் கேட்டது. வாய் திறந்து கேட்கவில்லை.

"என்ன ஜெசி.... நான் ஏன் வந்தேன் என்று ஆச்சர்யப்படுகின்றாயா?" குரலில் ஒருவித ஆதங்கம்.

"ம்....." தலையைத்தான் அசைத்தாள்.

"இன்னும் சில மணி நேரங்களில் நான் புறப்பட்டாக வேண்டும். இதனைக் கூறிய அவன் அந்த நெடிய ஹாலில் கைகளைப் பின்னால் கோர்த்தபடி உலவத் தொடங்கினான்.

ஜெஸீமா ஒன்றும் புரியாது சிலையாக நின்றாள்.

டக்கென்று திரும்பி அவன் ஜெஸீமாவை நோக்குகின்றான். பார்வை எதையோ கூறத் துடிக்கின்றது.

"எங்கு போக வேண்டும்?" எப்படியோ கேட்டுவிடுகின்றாள் அவள்.

"யாழ்ப்பாணம்..."

"ஆ...... அங்கா?"

அவள் ஏதோ கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டதைப் போல் பிரமிக்கின்றான்.

"ஆமாம்.......அங்குதான்"

நான் ஒன்று கேட்கின்றேன். செய்வீர்களா?"

"என்ன....?"

இருங்கள் தேத்தண்ணியைக குடித்துவிடுங்கள். அப்புறம் சொல்கின்றேன்

அவள் சமையலறைக்குள் நுழைந்து விட்டாள்.

அவளது சிந்தனை சுழன்றது.

யாழ்ப்பாணப் பிரயாணத்தை எப்படித் தடை செய்வது? இக்கேள்வி பூதாகர உருவெடுத்து அவள் முன் பயங்கரமாகக் காட்சி தந்தது.

அவனுக்கும் யாழ்ப்பாணப் பயணம் பயங்கரமாகவே காட்சி தந்தது.

அவன் ஒரு இராணுவத்தினன். இரண்டாவது உயர் அதிகாரி. அரசாங்கத்தின் மேலதிகாரியின் கட்டளைக்குப் பணிய வேண்டியது அவனது கடமை.

அவனுக்கு உலகமே சுழல்வது போல் தோன்றியது. அவன் ஒரு கலைப் பட்டதாரி. அவளும் அப்படியே.

பேராதனைப்பல்கலைக் கழகத் தமிழ் மன்ற ஆண்டு விழாவிலே ஜெஸீமா ஒரு சமயம் பேசியது அவனது நினைவுத் திரையில் பளிச்சிட்டது.

"இலங்கை - தென்னிந்தியா வாழ் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழே! மதத்தால் வேறுபட்டிருப்பதால் முஸ்லிம்கள் வேறு இனத்தவர் என்று எண்ணி

விடலாகாது. எமது உயிராய் - உடலாய் ஊனாய் உணர்வாய் - உள்ளொலியாய் இரண்டறக் கலந்து விட்ட தமிழ் அமிழ்து எமது உயிர்"

"ஐயோ... ஜெஸீமா... உனது தமிழுணர்வு என்னை விடைகொடுத்து அனுப்புமா?"

"இந்தாருங்கள்..."

அவன் சுய நினைவு பெற்றான்.

ஜெஸீமாவை ஏறிட்டு நோக்கினான். அவனது கண்கள் பனித்தன.

அவளது கண்களும் பனித்தன

"ஜெஸீமா...இப்படி உட்கார்..."

நீங்கள் கட்டாயமாக யாழ்ப்பாணம் போகத் தான் வேண்டுமா?"

"ம்..... கட்டாயமாகத்தான்."

"ஒன்று ஒன்று..."

"அந்த ஒன்றைக் கேட்டுவிடு ஜெஸி"

"ம்... நீ... நீங்கள்... உங்கள் பதவியை இராஜினா மாச் செய்து விடுங்களேள் இதைக்கூறி முடிக்கு முன் அவளுக்கு வியர்த்துவிட்டது.

"நீ இப்படிக் கூறுவாய் என்று முன்பே நினைத்தேன். ஆனால்"

"ஆனால் என்ன? எங்கள் கடையைப் பார்த்துக் கொண்ட நில்லுங்கள்.... நீங்கள் இப்போது போனால் கட்டாயமாக ஏதும் ஆபத்துக்கள் வரும். உங்களுள் கீழுள்ளவர்களைத்தான் உங்களால் கட்டுப்படுத்த முடியும் ஆனால் உங்களை விட உயர்ந்தவர்கள் கட்டளையிடும்போது நீங்கள் பணிந்துதானே ஆக வேண்டும்?"

"உண்மை தான் ஜெஸீமா"

"தமிழர்களைச் சுட்டுக்கொல்ல ஆணையிடு என்று கூறினால், பணிந்துதான் ஆகவேண்டும்..."

"ஐயோ....அப்படிச் செய்ய உங்கட்கு மனம் வருமா?"

அவன் அப்படியே நாற்காலியில் சாய்ந்து விட்டான்...

யாழ்ப்பாணம் போனால் கட்டாயம் நீதிக்கு எதிராக மனச்சாட்சி இல்லாமல் சுட்டுக்கொல்ல, தாக்க உத்தரவு பிறக்கும்... அப்படிச் செய்ய அவனால் முடியாது... முடியவே முடியாது...

அவன் சிந்தித்தான் சிந்தித்துக் கொண்டே இருந்தான்... இராணுவச் சட்டப்படி திடீரென இராஜினமா செய்வது இன்றைய நிலைமையில் முடியாத காரியம். எப்படியும் போய்த்தான் ஆக வேண்டும். நிமிடங்கள் சிந்தனையுடன் அமர்ந்து விட்டான்.

***

அவன் போய்விட்டான்- ஜெஸீமா கண் விழித்துப் பார்க்கையில்!

அவள் படித்துவிட்டு மேசைமேல் வைத்திருந்த செந்தமிழ்க் காவியம் சீறாவின் மேல் ஒரு துண்டுக் காகிதம் படபடத்துக் கொண்டிருந்தது.

ஜெஸீ!

நீ விழிக்க முன் நான் செல்கிறேன் மனம் வருந்தாதே! உன்னுடன் வாதித்து வெற்றிபெறும் திறன் எனக்கில்லை. மொழிக்காக உயிரையும் தியாகம் செய்வேன் இது எம் அன்பின் மீது ஆணை. ஆனால் திடீரென இந்நிலைமையில் இராஜிநாமா செய்யவும் முடியவில்லையே! என் செய்வேன் - ஜெஸீ - என் செய்வேன்! மனத்திடத்தோடு இரு.

இப்படிக்கு.
அன்பின்.
ரஹீம்.

இதைப்படித்தவுடன் இரண்டு துளி கண்ணீர் காகிதத்தில் உதிர்ந்து தெறித்தன.

"ம் என்ன மனிதர் இதற்கு முன் எத்தனை முறை இந்த உத்தியோகம் வேண்டாமென்று கூறி இருக் கின்றேன்! சே... என்ன மனம்" இப்படி எதை எதை எல்லாமோ எண்ணினாள்.

தலை "கிர்"ரென சுற்றியது அவளுக்கு! தள்ளாடியவளாய் கட்டிலைச் சரணடைந்தாள்.

கடந்தகால நிகழ்ச்சிகள் மனதில் நிழலாடின.

அவளும் அவனும் ஒன்றாகப் பயின்ற இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகம்...

அவர்களின் காதல் உரையாடல்களைக் கேட்டு கலகலவென சிரித்து ஆனால் மெளனமாக - அமைதியாக ஓடிய மகாவலி கங்கை...

அவர்கள் வழமையாகச் சந்திக்கும் மூங்கிற் தோப்பு...

அவர்கள் உரையாடிய விடயங்கள்...

அவை வெறும் காதல் உரையாடல் மாத்திரம் தானா?...

சே... எத்தனை எத்தனை விடயங்கள்...? வாழ்க்கை இலட்சியங்கள் - உலகின் எதிர்காலம் பற்றிய ஊகிப்புகள் - அரசியல் சர்ச்சைகள் - இலக்கிய விமர்சனங்கள். சரித்திரக் கண்ணோட்டங்கள்... அப்பப்பா... எத்தனை வகைகள்?

அவற்றை நினைக்கும் போது இத்தகைய துன்பச் சூழலிலும் அவளது இதழ்கடை புன்முறுவல் ஒன்றினை மலரவிட்டது.

"நாட்டுக்குச் சேவை என்பதை எல்லா வகை களாலும் செய்யலாம் ஜெஸி! அதற்குத் தனிப்பட்ட ஒரு துறையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில்லை. சொல்லாலும் - செயலாலும் அன்றி மௌனமாக இருந்து கொண்டும் செய்யமுடியும் கூறினான். ஜெஸீமா ஆமோதித்தாள் - "உண்மைதான். என்ற வார்த்தையால். ஆமாம் ஜெஸி. நீ பீ.ஏ. எழுதிவிட்டு என்ன செய்யப்போகிறாய்.... அவன் ஆவலோடு கேட்டான்.

"தந்தையிடம் கூறி ஒரு கல்வி நிலையத்தை நிறுவி அதனை நிர்வகிக்கப்போகின்றேன்- அதன் மூலம் ஒரு சிறு தொகையினரை என்றாலும் அன்பையும் அறத்தையும்

நற்பண்பையும் பழக்கவழக்கங்களையும் போற்றிப் பேணுபவர்களாக மாற்ற வேண்டும் என்று தான்...”

“சபாஷ் ஜெஸி... உன்னைப்போல் நான்கு பேர் முன்வந்து விட்டால்...”

“போதும்...சும்மா வள வளக்காதீர்கள் ஆமாம்... நீங்கள்...”

“நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? ம்... நான் செய்ய நினைத்திருப்பது ஒரு பெரும் செயல்... இதுவரை ஒருவரும் செய்ய நினைக்காத செயல்...”

“அப்படி யென்றால்...?”

“அப்படியென்றால்... ஒருத்தி இருக்கின்றாள் - அவள் பெரிய சீர்திருத்தவாதி ... அவளை நான் - நான் திருமணம் செய்து கொள்... ளப்...”

“ஐயோ.... பெரிய வீரச்செயல் தான் போங்கள்”

ம்....எத்தனை இனிமையான சம்பாஷணைகள்!

ஜெஸீமா தனது திட்டத்தை அமுலாக்கி விட்டாள்! அவள் கெட்டிக்காரி!

ஆனால் அவன் -

அவன் இராணுவத்தில் சேர்ந்துவிட்டான்.

அவள் எவ்வளவுதான் சொல்லிப்பார்த்தாள் அவன் கேட்க வேண்டுமே அவளது கண்கள் மகாவலி யாய் மாறின - ஆமாம். பொங்கிப் பிரவாகித்து நெளிந்து, வளைந்து துள்ளி அமிழ்ந்து ஓடும் மகாவலியைத் தடை செய்ய முடியாதுதான் !

***

அகிம்சா முறையில் சத்தியாக்கிரகம் செய்த தமிழர்களை இராணுவத்தினர் அடித்து சுட்டுப் பொசுக்கி.. இழுத்து... குத்தித் தாக்கி

ஐயோ... ஒரே இம்சை... இம்சை

ரஹீம் ஆணையிட்டுக் கொண்டிருந்தான்... அவனது கையில் சுழல் துப்பாக்கி அது சுழன்றால் அதை அவன் இயக்கினால்... ஆமாம்... பல உயிர்கள் ஒரே கணத்தில் பழிவாங்கப்பட்டு விடும்...

ரஹீம் இப்பொழுது சிலையாக நின்று கொண்டிருந்தான். உண்மையில் சிலை தான்!

அவனது மனதிலே விரக்தி!

செயலிலே வெறுப்பு!

அவன் சிலையாக நின்றான்-

“ரஹீம்... மனித தர்மம் என்பதெல்லாம் இப்பொழுது பார்க்கக் கூடாது! நாம் அரசாங்கத்தின் ஊழியர்கள் அதன் கட்டளைக்குப் பணிவது நம் கடன்”

ரஹீம். அவனது உயரதிகாரியிடம் நியாயம் பேசப்போய் பெற்ற அறிவுரை இது.

தொடர்ந்து அவர் சொன்னார். “மிஸ்டர்... நாம் இப்படிச் செய்வது எனக்கே பிழையெனத் தெரியத்தான் செய்கிறது... ஆனால் உத்தியோகத்தை நினைக்கும் போதுதான்...”

ரஹீம் எண்ணினான். சீ... கேவலம் இந்த அற்ப உத்தியோகத்திற்காகத்தான் நானும் என் உணர்ச்சி களைத் தடைசெய்து மரக்கட்டையாக வாழ வேண்டுமா? இப்படியும் என்ன வாழ்வு வேண்டிக் கிடக்கிறது? ஐயோ...ஜெஸிநீ கூறியதை முன்பே ஏற்காமல் போய்விட்டேனே!”

சிந்தனைச் சுழலிலே சிக்கியபடி நின்றான் நின்றுகொண்டே நின்றான்!

“அம்மா...அம்மா.” இந்தக் குரல் -அவலக்குரல் ரஹீமை ஓர் உலுக்கு உலுக்கியது.... அது... அது...

ஆம் நிச்சயமாக ஜெஸிமாவினுடையதேதான்...

“ஆ...ஐ.. யோ...”

ரஹீம் அசுர வேகத்தில் நோட்டமிட்டான்... அவனது கண்கள் கண்டுகொண்டன.

“ஜெ... சி... இ...இ...” குரல் அண்டத்தையே பிளப்பதாக மாறியது....

கால்கள் காற்றென விரைந்தன.

அவனது கண்களையே அவனால் நம்ப முடிய வில்லை. ஓர் இராணுவத்தினன் ஜெஸீமாவின் கையைப் பிடித்து இழுத்து...

ம். இது என்ன வேலை... அவனைப் பார்த்து ரஹீம் உறுமினான் அது கரடியின் உறுமல்!

அவன் பயத்துடன் ஓடிவிட்டான்!

“ஆ...நீங்களா ?”

அவளது பெரிய விழிகள் ஆச்சர்யத்தால் அகன்றன!

“ஜெஸி.... என்..... ஜெஸி...” அவன் கதறினான் - அது கன்றை இழக்கும் தாய்ப்பசுவின் கதறல்!

“என்னை மன்னித்து விடுங்கள்... உங்களிடம் சொல்லாமல் வந்துவிட்டேன்.... அவளது உடம்பு நடுங்கியது!

சில கணநேரம்தான் நடுக்கம் ஒடுங்கியதும் - பேச்சு அடங்கியது...ஆமாம்...அவளது ஆவி எங்கோ சென்றடைந்து... எதையும் தாங்கமுடியாத பலவீன இருதயமுள்ள அவளால் இராணுவ வீரனின் செயலைப் பொறுக்கமுடியவில்லை.

ரஹீம் கதறினான் அது கன்றை இழந்த பசுவின் கதறல். ஆமாம்... நிச்சயமாக!

இப்பொழுது ரஹீம் இராணுவத் தலைமைக் காரியாலயத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றான்... இதயம் நிரம்பிய கவலையோடு!

எத்தனையோ முறை முயற்சி செய்து விளக்கம் கொடுக்க முனைந்து முடியாமற்போன விடயம் அவளின் மரணம் மூலம் அவனுக்கு நிதர்சனமாக்கப் பட்டு விட்டது... அவன் இப்பொழுது உணர்கிறான்.... உணர்ந்து என்ன பயன்?

அவன் ஷேர்ட் பொக்கட்டைத் தடவிப் பார்க் கின்றான்... ஆமாம் அங்குதான் அவனது இராஜினாமாக் கடிதம் இருக்கிறது...

அவன் நடக்கிறான்.

நடையிலே ஒருவித மந்தம்.

அது உள்ளத்தின் தன்மையை வெளிப்படுத்து கிறதா?

(நன்றி - சுதந்திரன் **14.06.1964**)

## ஹஜ்ஜுப் பெருநாள்

- நயீமா சித்தீக் -

உலகெலாம் படைத்துக் காக்கும்
உருவிலா தொப்பற்ற இறையே
அலகிலா அருளும் அளவிலா அன்பும்
அகிலமீதிற் சொரியும் யா அல்லாஹ்
இலகுமோர் இவ்வினிய கவியரங்கில்
இணைந்தே நானுங் கவிபாட
துலங்கு முன்னுயரருள் தந்ததற்காய்த்
துதித்தே உனைத் தொடங்குகின்றேன்.

எழுவான் கடல் பூமி
எல்லாம் படைத்த ஏகனே
தொழுவோர் தமக்கினியோனே
தூய ரஹ்மானே துலங்கும் அர்ரஹீயே
எழுந்தே என்னியத்து வரும்
ஏற்றமுறு ஸலாமதை
அழுந்தவே யுரைத்தேன
அண்ணலா மிறசூல் நபிதமக்கும்!

வானொலிக் கவியரங்கா மிவ்வரங்கினில்
வகையாய்த் தலைமை தாங்குந் தலைவா
நானெழுந்து கவிபாட முன்னும் பின்னும்
நற்றமிழால் கவிபாடுமுயர் சோதரரே
வானெழுந்து வகையாய்த் தான் தவழ்ந்து
வாஞ்சையோடு செவியுறுவோர்க்கு
தேனெடுத்து கவிசொல்ல செவிசாய்க்கும்
நேய நெஞ்சங்களே வாழ்த்துக்கள்!

குடிநாக் குழறக் குடிக்கண் சிவக்கக்
கொடுவாள் எடுத்த குறைஷியவை
கடிவாய் இழந்த புலிபோல் அடக்கிக்
கலிமா பொழியும்படி செய்த கோமான்
இடிபோல் இடித்தும் எரிபோல் கனன்றும்
இடும்பையே இழைத்த எதிரிகளை
கொடி போல் வளைத்துக் குணத்தால் அணைத்து
குபீரெனுந் தீயை குவலயத்திலழித்த இறஸூல் நபி

மக்கத்து மாநாகரின் மாணிக்கமாமவர்கள்
மாசுற்ற குறைஷஸக் காபிர்களின்
பக்கத்தால் வந்த பல பிரச்சினைகளும் போக்கி
பசுந்தரையாம் மதீனமாநகரத்துக்கு ஹிஜ்ரத்
புக்கதன் பின்னர் புனித பத்தாமாண்டு
புரியவே வந்தார்கள் புனித ஹஜ்கடமை
தக்கவுரையாம் ஹஜ்ஜதுள் விதாவையும்
தகையுடனாற்றினாரா பாத் பெருவெளி

மறைகூறும் திருமொழி இறவாத அருள்மொழி
மானிலத்தோர்க்குயர் சட்டமாகும்.
குறைகூற முடியாத குர் ஆனின் சட்டங்களும்
குவலயத்தில் தான் வாழ்ந்த வாழ்வதுவுமே
பிறைபோல வளர்கின்ற பிற்சமுதாயத்துக்கு
பிழை நீக்கி வழி காட்டுமரு வழிகாளகும்.
கரையேறத் துடிக்கின்ற காசினியார் தமக்கே
கடைத்தேறவே இவை காட்டும் இனிய வழிகளை

மாசகற்றி மாபெரும் முகம்மதெங்கள் கோமான்
மானிடர்க்குணர்த்திய உரையிவையுடனே
மாசகற்றும் மற்றும் பலவுமுண்டே
மக்களிடையே பேதமிலையென்றார்
பேசுமுலகில் ஆதமின் மக்களனைவருமே சமம்
பேசிட வேண்டாமே பேதமென்றார்.
காசினியில் காரிகையர் தம் வாழ்வுயரவும்
காட்டிலிட்டார் அவ்வுரையில்அழகாம் வழிகளே

பூரணவாழ்வின் பூத்திடும் பொழிவுகளை
பூவுலகிற்குத் தந்த பூமகனார்
காரண நபிகள் தம் இறுதியுரையிலும்
காரிகையர் எமையே மறந்தாரில்லை!
தாரணி வாழ்வில் தரங்களுயர்த்திய
தாஹா நபிகள் தந்தார் பல நெறிகள்
பூரண உரிமையுடன் பூவையரும்
பூரித்தே வாழ வழி விடுங்களென்றார்.


சுடுகின்ற பெருநெருப்பாம் வெயில் தகிக்க
சூழ்ந்திருக்கவே மக்கள் வெள்ளம் அரபா
படுகொலைகள் பாவமென்றேயுரைத்தார் பெருவெளி
பழிக்குப் பழி வாங்க விழி வென்றேயுரைத்த
கொடுத்திடுங்களுங்களுணவையே யடிமைக்கும்
கோமானிறைவனுக்கஞ்சிடுங்கள்
உடுத்திடும் உடைதனையும் உரியதாயளியுங்கள்
உலகாம் மறுமைக்குமாய் பணிபுரியுங்கள்

ஓது திருமறை நாத ஒலியலை
மீது நிலவுமோர் அல்லாஹ்வின்
தூதரென நபி பாலைமணல் வெளி
மீது பிறந்துலகுக்குச் செய்திட்ட
மாதருரிமைப் பிரகடனத்தை
மானிலந்தான் மறந்திடலாமோ
தீது நெறி கெட தீனினால்
தீர்க்கமாயரிவையர் பெற்றலை பேசலரிதே

ஆர்த்தெழும் அன்பினடைக்கலமாய்
அன்னையர் வாழ்வின் வழிகாட்டியண்ணலால்
பெண்ணெனப் பிறந்தால் மன்னிடையே
புதைக்கும் பேதமை இதைத் தொழித்து
பெண்ணின் உரிமை பேணிடலோ
பெருங்கடன் மாந்தர்க்கென மொழிந்து
பெண்ணுக்குதவும் நன்மைகளோ
பெரும் நகரத்தின் திசையாகுமென்றார்.

இ.சு.முரளிதரன்

# வாழ்க்கை வளைவுகள் வசீகரக்கதைகள்




முஸ்லீம் சமூகத்தின் வாழ்வியலை பெருந் திரள் வாசிப்பிற்கமைவாக, பத்திரிகைகளில் கதை களாக எழுதியவர்களில் நயீமா சித்தீக் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றார். பாடசாலைப் பருவத்திலே எழுத்தினைக் கரம்பிடித்து இன்றுவரை மாறாப் பசுமையோடு பயணித்துக் கொண்டிருக்கிறார். அவர் பல்வேறு பத்திரிகைகளில் எழுதிய கதைகளின் தொகுப்பாக “வாழ்க்கை வளைவுகள்” அமைந்துள்ளது. மணி மேகலைப் பிரசுர வெளீயிடாகக் காணப்படும் இத் தொகுதி இருபது கதைகளைக்கொண்டமைந்துள்ளது. தினகரன், தினக்குரல், சிந்தாமணி, நவமணி, கலை மலர், சுடர்ஒளி ஆகிய பத்திரிகைகளில் வெளியான கதைகளாக அமைந்துள்ளன.

முஸ்லிம் சமூகத்தின் பண்பாடுகளையும் வாழ்வியலையும், இறை நம்பிக்கைகளையும், மொழி யாடலையும் வெகு நுட்பமாக இக்கதைகள் வெளிப் படுத்துகின்றன. கல்வி சார் செயற்பாடுகள், திருமணம் சார் சிந்தனைகள் ஏனையவை என எளிதாக வகைப்படுத்தி இவற்றை அணுகுதல் ஏற்புடையதெனக் கருதுகின்றேன். உங்கள் தரிசனத்தில் இவ்வகைப்பாடு வேறுவிதமாக அமையலாம்.

#### அ.கல்விசார் சிந்தனைகள்

சமூக முன்னேற்றத்திற்குக் கல்வியே அடிப் படையாக அமைகின்றது. கல்வி சார்ந்து புதிய தலைமுறையை கட்டியெழுப்பினால் சமுதாய விருத்தி எளிதிலே சாத்தியமாகி விடும். இத்தகைய கருத்தி யலை வெளிப்படுத்தும் வகையிலே ஓர் உதயத்தின் அஸ்தமனம், ஒரு அர்சாடின் கதை, வேலியே பயிரை மேய்கிறது. ஆதமின் அழுகை, ஒரு முளை கிள்ளி எறியப்படுகின்றது என்னும் ஐந்தும் கதைகளும் அமைந்துள்ளன. கூழாங்கல்லின் வசீகரம் போல மாறு பட்ட பக்கங்களை இக்கதைகள் இனங்காட்டுகின்றன.

சமூக அக்கறை மிகு ஆசிரியரான அன்சாரின் மனமுடைவினை “ஓர் உதயத்தின் அஸ்தமனம்” கதை இனங்காட்டுகின்றது. நஸீர் என்ற ஏழைச்சிறுவன் மீது அக்கறை கொண்டு கல்வியினைக் கட்டியமெுப்ப முயலும்போது வழங்கிய தண்டனைக்காக, நஸீரின் தாயும், சகோதரனும் மோசமான வார்த்தைகளைப் பாவிக்கிறார்கள். இதனால் நெருடலுக்கு உள்ளாகி, பாடசாலை போக விருப்பமற்ற ஆசிரியராக அன்சார் மாறுவதை இக்கதையிலே வெளிப்படுத்துகின்றார். சமூக உள்ளடுக்குகள் சீர்செய்யப்பட வேண்டிய தேவையை இக்கதை உணர்த்துகிறது.

உளவியல் அணுகுமுறையோடான கதையாக “ஒரு அர்சாடின் கதை” அமைந்துள்ளது. இறைவன் அருளிய ஈகையான கல்வியை பிறருக்கும் வழங்கும் எண்ணம் கொண்ட ஆசிரியைக்கும் அர்சார்ட் என்ற மாணவனுக்கு இடையிலான உறவினைக் குறிப்பிடு கின்றது. அர்சாட் ஓவியம் கீற முடியாமைக்காக பின்னணியை உளவியலோடு பதிவு செய்துள்ளார். கல்வி யுலகின் கேவலமான செயற்பாட்டினை வெளிப்படுத்துவ தாக “வேலியே பயிரை மேய்கிறது” கதை காணப்படு கின்றது. தனிப்பட்ட விரோதத்திற்காக மாணவனைப் பழி வாங்கும் ஆசிரியரையும் தடுக்க நினைக்கும் மற்றொரு உன்னத ஆசிரியரையும் கதை இனங்காட்டுகின்றது.

ஆரம்ப பாடசாலை ஒன்றின் சம்பவங்களை விவரிப்பதாக “ஆதமின் அழுகை” கதை அமைகின்றது. தாயைப் பிரிந்து அழுகின்ற மழலையின் கல்விக்காக, அவன் அருகில் தாயையும் அமர்ந்திருக்கும் வாய்ப்பினை வழங்கும் கல்வியை நிர்வாகத்தைக் கதை காட்டுகிறது. உலகின் முதல் மனிதனான ஆதாம் சொர்க்கத்தை விட்டு நீங்கியதால் அழுததைச் சுட்டிக்காட்டி, சிறுவனுக்கு தாயின் அருகிருப்பே சொர்க்கம் என்பதைக் கதை உணர்த்துகின்றது.

#### இளைஞர்களின் செயற்பாடுகள்

இளைய சமூகத்தின் ஒன்றிணைவு பெரு மாற்றங் களை உருவாக்கும் என்பதில் கதாசிரியர் அதீத நம்பிக்கை கொண்டுள்ளமையை இத்தொகுப்பு இனங்காட்டு கின்றது. இத்தொகுப்பிலுள்ள கதைகளில் பல, இளை யோர் சமூகச் செயற்பாடுகளை முன்னிறுத்துகின்றன. கரைந்து போகும் கறைகள், வீடு வந்து சேரும் சிறு பிள்ளை வேளாண்மைகள், நல்ல காரியம், ஒரு கல் கரைகிறது, ஒரு மீலாத் விழா அரங்கேறுகிறது என்னும் ஐந்து கதைகளும் அவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

அப்புத்தளை பிரசேத்திலுள்ள இளைஞர்கள் வெளிநாட்டு உதவிகளை பெற்று அனைத்து மக்களிடம் உரிய வகையில் சேர்ப்பிக்கிறார்கள். அவர்களின் குறை காண முற்படுவோர் இறுதியில் வெட்கித்தலை குனிவ

தாக "கரைந்து போகும் கறைகள்" கதை காணப்படு கின்றது. உழைத்து வாழும் எண்ணங் கொண்ட ரமீஸா என்ற கதாப்பாத்திரத்தை மையமாக கொண்டு இஸ்லாமிய வழக்காறுகளை நுங்கும் நுரையுமாக வெளிப்படுத்தும் கதையாக "வீடு வந்து சேரும் சிறுபிள்ளை வேளாண்மைகள்" அமைந்துள்ளது. (தலைப்பிலே "கள்" விகுதி தேவையற்றது) நோன்பின் போது வீடு வீடாகச் சென்று ஸக்காத்தை சேகரிக்கா மல், பித்ரா அரிசியை வரிசையில் நின்று வாங்காமல் தன்மானத்தோடு வாழும் பெண்ணுக்கு ஊரிலுள்ள இளைஞர்கள் ஒன்றிணைந்து தையல் இயந்திரம் வழங்குவதைக் கதை இனங்காட்டு கின்றது. நோன்பு தினத்தில் மக்களுக்கு கொடுக்கப்படும் ஸ்காத்து என்னும் பணத்தை உரியவர்களுக்கு கிடைக்கச் செய்ய இளைஞர்கள் திரண்டு ஊர் பெரியவர்களுக்கு அறிவுறுத்துவதை மையப்பொருளாகக் கொண்டு, "நல்ல காரியம்" எழுதப்பட்டுள்ளது. மீலாத் விழாவுக்குப் பிரதம விருந்தினராக அழைத்து கவிதை, பேச்சு இறை சிந்தனைத் தெளிவுபடுத்துவதாக "ஒரு கல் கரைகிறது" கதை அமைந்துள்ளது. ரவூப் முதலாளியின் மனமாற்றமே கதையின் மையப்பொருளாகும்.

பல்கலைக்கழக மாணவனான நிசாம் என்பவன், ஊர் இளைஞர்களைத் திரட்டி கிராமத்தவர்களுக்கு நன்மை செய்வதை "ஒரு மீலாத் விழா அரங்கேறு கிறது" கதை உணர்த்துகிறது. இளைஞர்கள் ஒன்றிணைவின் வெற்றியும், கெட்டவர்களுக்கு இறைவன் தண்டனை கொடுக்கும் நம்பிக்கையும் கதையிலே வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக ஐந்து கதைகளிலும் இளையோர் செயற்பாடுகளால் நிகழும் சமூகமாற்றம் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இ. திருமணம் சார் சிந்தனைகள்**

வாப்பாவைப்போல,கலைந்தகனவு இதோ ஒரு மாப்பிள்ளை, அழுகையில் கரையும் துயரங்கள், எண்ணச் சிறகுகள் என்ற ஐந்து கதைகளும் திருமணம் சார்ந்த விடயங்களைப் பேசுகின்றன. சீதனத்தையும் பெண்ணின் உழைப்பையும் எதிர்பார்த்துத் திருமணம் செய்ய விரும்பும் ஆண்களின் சுரண்டலை இனங்காட்டு வதாக "வாப்பா வைப்போல" என்ற கதை அமைந் துள்ளது. நேர்மையும், நற்குணமும் மிக்க தனது தந்தை யைப் போன்ற கணவனுக்காக "றமீறா" என்ற பெண் காத்திருப்பதை கதையில் பதிவு செய்துள்ளார். ஊடற் தோற்றத்தில் சற்றே அழகு குறைவான பெண்ணின் திருமணத்தை மையமாகக் கொண்டு "கலைந்த கனவு" கதை அமைந்துள்ளது. ஊடல் அழகைக் குறித்துக் கவலைப்படாது விரும்பும் மன்சூர் என்ற இளைஞனும் இறுதியில் பெற்றோருக்கு விருப்ப மில்லை எனக் கைவிடும் அவலத்தினை இக்கதை வலியுறுத்துகிறது.

"இதோ ஒரு மாப்பிள்ளை" கதையும் சீதனத்திற் காக மணம் செய்ய மறுக்கும் காதலை இனங்காட்டு கின்றது. ஸிராஸா - மன்சூர் என்னும் காதலர்கள் எதிர்கால வாழ்வுக்காக காதலைத் தியாகம் செய்வதை "அழுகையில் கரையும் துயரங்கள்" கதையில் தரிசிக்க முடிகின்றது.

தன் காதலியைத் திருமணம் செய்யப் பொருளீட்டும் நோக்கிலே வெளிநாடு சென்று திரும்பும் இளைஞன், அவள் திருமணமாகி வறுமையில் வாடுவதைக் கண்ணுற்று, அவளது கணவனுக்கு பண உதவி செய்வதை "எண்ணச் சிறகுகள்" கதை வெளிப் படுத்துகின்றது. இந்த ஐந்து கதைகளிலும் திருமணத் திற்குப் பொருளாதாரம் பெருந்தடையாக இருப்பதை யும், சீதன ஆதாயம் கருதும் ஆண்மையச் சிந்தனை யினையும் காண முடிகின்றது.

**ஈ. ஏனையவை**


சமூக நெறி பிறழ்வால் எதிர்கால சந்ததி பாதிக்கப்படுவதை "அவன் அழப் பிறந்தவன்" என்ற கதை சுட்டி நிற்கிறது. தமது இன்பத்திற்காக வாழ்ந்தவர்கள். குழந்தை உருவான பின்பு அதை அனாதையாக விட, எடுத்து வளர்ப்போர் அக் குழந்தையைக் கொடுமைப் படுத்துகின்றனர். தமக்குப்பிள்ளை இல்லை என்று எடுத்து வளர்ப்போர், நாளடைவில் குழந்தை பிறந்தால், வளர்ப்புப் பிள்ளையைக் கொடுமைப் படுத்துகின்றனர். அனைத் திற்குமான மூல காரணத்தைச் சாடுவதாகக் கதை நிறைவு பெறுகிறது.

பெண்மையின் நேர்மையினையும், துணிச்சலை யும், தலைமைத்துவத்தினையும் விளக்குவதாக "காலம் மாறவே செய்யும்" கதை அமைகிறது.

நேர்மையற்ற வேலையினைச் செய்ய விரும்பாத இளைஞன் ஒருவன், தொழிலின்மை சார்ந்த உறவுகளின் உதாசீனச் சீண்டலால் தன் மானத்தை விட்டுவிட்டு, நேர்மையற்ற வேலையினை நாடுகின்ற அவலத்தினை "தன்மானம்" சிறுகதை எடுத்து விளக்குகிறது. "காலம் பல கடந்தாலும்", "முற்பகல் செய்யின்" என்னும் இருகதை களும் முதலாளித்துவத்தின் திமிரை இனங்காட்டு கின்றன. "காலம் பல கடந்தாலும்" கதையிலே முத லாளியின் ஏமாற்று வேலையினால் கோபமடைந்து நியா யம் கேட்க விளைகின்ற இளைய சமுதாயத்தின் பிரதி நிதியை காண முடிகின்றது. பணத்திமிரோடு: வாழ்ந்த முதலாளிக்கு இறைவன் தண்டனை வழங்குவதை "முற்பகல் செய்யின்" கதையானது புலப்படுத்து கின்றது.

ஆசிரிய அனுபவத்தையும், வாழ்வியற் கூறுகளை யும், இறைசார்ந்த நம்பிக்கையின் மைய நீரோட்டத்தை யும் வெகு நுட்பமாக இக்கதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. நயீமா சித்திக் பெருவாரிக்கதைகளை எழுதியவராக அமைந்துள்ளார். இக்கதைகள் பெருந் திரள் வாசகர்களின் நாட்டத்திற்குரிய பண்போடு காணப் படுகின்றன. சிறுகதைக்கான கட்டிறுக்கத்தினைத் தளர்த்தி, எளிமையோடு கதையினை நகர்த்தியுள்ளார். இத்தகைய கதைகளுக்காகவே பெருந்திரள் வாசகர் குழுமம் காத்துகிடக்கிறது என்று கூறி நிறைவு செய்கிறேன்.

புலோலியூர் வேல்நந்தகுமார்




# நயீமா சித்திக்கின் வாழ்க்கைப்பயணம் குடும்ப நாவல் குறித்த ஒரு வாசகநிலை நோக்கு

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் பெண் நாவாசிரியைகளின் பங்களிப்பு என்பதும் காத்திர மானதாகவே விளங்குகிறது. ஆண் படைப்பாளிகளோடு ஒப்பிட்டால் எண்ணிக்கை அளவில் அவை குறைவானவையாக இருந்தாலும் அவற்றின் உள்ளடக் கங்கள் கனதியானவையாகவே விளங்குகின்றன. அவ்வகையில் மங்களநாயகம் தம்பையாவில் தொடங்கும் இந்தப் பயணம் இன்றைய தாட்சாயாணி வரை இது நீள்வதைக் காணலாம். மலையகத்திலும் தூரத்துப்பச்சை தந்த கோகுலம் சுப்பையா உட்பட பல சிறப்பான பெண் படைப்பாளிகளை காண முடிகிறது. ஒரு காலகட்டத்தில் வீரகேசரிப் பிரசுரம் என்பது இத்தகைய பல படைப்பாளுமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியது என்பதும் மறுக்க முடியாத விடயம் ஆகும். அவ்வகையில் அப்புத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நாவலின் கதாசிரியை திருமதி நயீமா சித்திக் மலையகத்தின் முதற் பெண் முஸ்லிம் நாவலாசிரியை என்ற சிறப்புக்குரியவராகிறார். இவர் அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயத்திலும் காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்திலும் பசளை மத்தியமகாவித்தியாலயத்திலும் கல்வி கற்றவர். விடுதி வாழ்க்கையும் இலக்கிய ஆர்வம் மிக்க இவரது அன்னையின் ஊக்கமும் இவரை எழுத்துப் பணியில் ஈடுபடச் செய்தது. பல வருடங்களாக இலங்கை வானொலி முஸ்லீம் பிரிவு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும் நிகழ்ச்சிகளை நடத்தியும் வந்த இவர் இளவயது முதலே ஈழத்தின் பிரபல பத்திரிகைகளில் சிறுகதை, கட்டுரை, கவிதை, உருவகக்கதைகள் என்பனவற்றை எழுதிப் பெயர் பெற்றவர் தற்போது ஓய்வுநிலை ஆசிரியராக விளங்குகின்றார்.

இவரால் எழுதப்பட்ட இஸ்லாமிய யுவதி ஒருத்தியின் காதல் காவியமாக அமையும் சமூக நாவலே "வாழ்க்கைப் பயணம்" என்பதாகும். இது இவரது முதல் நாவலாகும். 1974 ஆம் ஆண்டு வீரகேசரி பிரசுரமாக இது வெளிவந்தது. இந்நாவல் 30 அத்தியாயங்கள் கொண்ட தாக 109 பக்கங்களில் அமைந்துள்ளது.

திருமணமான பாடசாலை அதிபராகிய மஹ்ரூபிற்கும் அப்பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றும் திருமணமாகாத ஹிதாயாவுக்கும் இடை யிலான தூய்மையான காதலை பல்வேறுபட்ட திருப்பு முனை சம்பவங்களோடு இணைத்தும் சொல்லும் ஒரு அற்புமான காதல்காவியமாக இந்நாவல் விளங்குகிறது. "கீழ் வானம் வெளுத்துவிட்டது அந்த வெளுப்பினூடே செஞ்சாந்தைக் குழைத்து வண்ண வண்ண ஓவியங்காக இயற்கையன்னை மனம் போன போக்கில் வானமெங்கும் தீட்டிக் கொண்டிருக்கும் இனிய காலைப்பொழுது... என்ற

இயற்கை வர்ணனையோடு இந் நாவல் தொடங்குகிறது. ஹஸதாயா பஸ்சில் பாடசாலை செல்லும் போது அதே பஸ்ஸில் பயணிக்கும் கமால் என்பவன் மூலம் ஏற்படும் இடையூறுகளும் அதற்கு பின்னால் ஜமீல் என்பவனுக்கும் ஹிதாயாவுக்குமான பழக்கமும் இருவரதும் திருமணம் பணத்தால் நின்றுபோன நிலையும் எனப் பல விடயங்கள் பேசப்படுகின்றன. அடுத்தது என்ன, ஏன் என்ற கேள்விகளை கேட்க வைத்து வாசகரை வாசிக்கத் தூண்டும் வகையில் இந்நாவலின் எடுத்துரைப்பும் சம்பவக்கோர்ப்பும் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்புக் குரியது. ருஹ்மத்தும்மா என்ற பாத்திரம் ஹிதாயாவின் தாயாக அவளது இன்பதுன்பங்களில் பங்கெடுத்து அவளதுநல் வாழ்வுக்காக தன்னை தியாகம் செய்பவளாக பாச முள்ளவளாக இங்கு காட்டப்பட்டுள்ளாள். அதிபர் மஹ்ரூபிற்கும் ஹிதாயாவுக்குமான உறவு காதலாக மாறு வதை கதாசிரியர் எடுத்துக் காட்டும் மொழிநடையும் சம்பவச் சித்திரிப்புகளும் கூட ஒரு மென்மை யுணர்வுடன் நாவலின் கதையூடாக நகர்த்தப் பட்டுள்ளமையாலும் சிறப்புக்குரியது. சுபீக்கா என்ற பாத்திரம் மற்றவரின் உயர்வு கண்டு பொறாமை கொள்ளும் மற்றவரைப் பற்றி இல்லாத பொல்லாத கதைகளை கட்டி இன்பம் காணும் ஒரு பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளது. மஹ்ரூபின் அண்ணனாக வரும் பாத்திரம் தம்பியின் எதிர்கால வாழ்வின் மீது அக்கறை உள்ள ஒரு பாத்திரமாக தம்பியின் உண்மைக்காதலை சேர்த்து வைக்கப் பாடுபடும் ஒரு பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார். உண்மையில் இந்நாவலை வாசிக்கும் போது வாசகர்களாகிய நாமும் அப்பாத்திரங்களோடும் அவர்களது உணர்வுகளோடும் சேர்ந்த பயணிக்க வைத்திருப்பது இந்நாவலாசிரியையின் வெற்றி என்று கூறலாம். இருவரது உண்மைக் காதலும் சேருமா என்ற ஆவலும் ஏக்கமும் எம்மையும் தொற்றிக் கொள்கிறது. இடையிடையே அறிவுரைப்பாங்கில் வரும் விடயங்கள் எம்மையும் சிந்திக்க வைக்கின்றன.

மஹ்ரூபின் அண்ணனது மனைவி(சித்தி) என்ற பாத்திரம் தன் கணவனை எதற்கெடுத்தாலும் திட்டித் தீர்க்கும் ஒரு பாத்திரமாக காட்டப்பட்டுள்ளான். ஊலகில் வேறுபட்ட மனவுணர்வு கொண்ட பெண்கள் இருக்கிறார்கள் என்பதனை வாழ்க்கைப் பயணத்தினூடாக எமக்கு கதாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். முஹ்ரூபின் தந்தையாக வருமம் ஹலீம் ஹாக்ஜியார் தனது மகன் ஹிதாயாவை விரும்புவதை எதிர்க்கும் மனநிலை கொண்டவராக கௌரவத் திமிர் கொண்டவராக காட்டப்பட்டுள்ளார்.



நாவலின் பிற்பகுதியிலும் திருப்பங்கள் பல கொண்டதாகவே அமைந்துள்ளது. ஹிதாயாவின் தயாரின் மரணம் ஹிதாயாவுக்கு கிடைத்த இடமாற்றம் சம்சுதீன் என்ற புதிய பாடசாலை அதிபர் மூலம் மஹ்ரூப் ஹிதாயாவை பற்றி அறிந்து கொள்ள வேண்டிய நிலை நிறைவிலே பாடசாலை மாணவர்களோடு கல்விச்சுற்றுலா சென்ற வேளை ஒரு நீர் வீழ்ச்சியடியில் மஹ்ரூபை சந்திப்பதும் அவரடிக்கு வர முயன்றபோது அந்த நீர்வீழ்ச்சியில் சறுக்கி விழுவதும் அவளை காப்பாற்றிய போது முதலில் கண் விளித்துப் பார்த்த அவள் நிரந்தரமாய் தன் கண்களை மூடிக் கொண்டதும் வாழ்க்கையின் பாதை எங்கு எப்போது முடியுமென்று யார்தான் அறிய முடிகிறது என்ற சோகமான முடிவுடன் இந்நாவல் முற்றுப் பெறுகிறது.

உண்மையில் இது இவரது முதல்நாவல் என்பதை நம்ப முடியாதுள்ளது. அந்தளவிற்கு சிறு கதைகள் மூலம் பட்டை தீட்டப்பட்ட இவர் நாவல் என்ற வடிவத்திலும் முத்திரை பதிப்பதை இப்படைப்பு நிரூபித்து நிற்கிறது. வாழ்க்கைப்பயணத்தில் ஒரு பெண் எதிர் கொள்ளும் பல்வேறுபட்ட சோதனைகளை காதல் என்ற உணர்வுத் தளத்தில் வைத்து தந்துள்ள இந்நாவலை படித்த பின்பும் எங்கள் நெஞ்சில் காதலின் காட்சிகளாக மஹ்ரூபும் ஹிதாயாவும் வாழ்கிறார்கள் என்றால் அது மிகையல்ல. நாவலின் முடிவை ஏற்க மனம் மறுத்தாலும் எமது வாழ்க்கைப் பயணத்தில் எதிர்பாராமல் ஏற்படும் இத்தகைய முடிவுகளையும் நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டியுள்ளது என்பதை தன் புனைவுசார் படைப்பு மொழியால் பதிய வைத்த மூத்த பெண் படைப்பாளிக்கு நல்வாழ்த்து. இவரது சிறுகதைகளில் ஒன்றாகிய வாழ்வின் சித்திரங்கள்? என்பது எமது ஆசிரிய கலாசாலை பாடத்திட்டத்திலும் இடம் பெற்றுள்ள கதை என்ற விடயத்தையும் பகிர்ந்து இவ் வாசகநிலைப் பகிர்வை நிறைவு செய்கின்றேன்.

கே.பொன்னுத்துரை

# மலையகத்தின் மூத்த பெண் படைப்பாளி திருமதி நயீமா சித்தீக்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மலையக இலக்கியம் புது இரத்தம் பாய்ச்சியது என்ற பேராசிரியர் க. கைலாசபதியின் கூற்றிற்கிணங்க மலையக இலக்கிய வளர்ச்சிக்கு உந்து சக்தியான வகிபாகத்தினை வகித்த மலையகப் பெண் படைப்பிலக்கிய வாதிகளை நாம் கவனத்தில் கொள்வது புறந்தள்ள முடியாத அதிமுக்கிய விடயமாகும். அந்த வகையில் மலையக மூத்த பெண் படைப்பாளிகளான திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யர், “தூரத்துப் பச்சை” நாவலை தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கிய திருமதி கோகிலம் சுப்பையா, திருமதி சிவபாக்கியம் குமாரவேல், போன்ற பெண் பிரம்மாக்களின் வரிசையில் மலையக முஸ்லிம் பெண் படைப்பிலக்கியவாதிகளும் பல தளங்களில் தனது பங்களிப்பினைப் பதிவு செய்துள்ளனர். அந்த வரிசையில் புசல்லாவை இஸ்மாலிகா, கலாபூஷணம் திருமதி நயீமா சித்தீக் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்

இன்றும் எழுத்துப் பணியை தொடரும் ‘இலக்கியத் தாரகை’ கலாபூஷணம் திருமதி நயீமா சித்தீக் அவர்கள் பற்றிய சிறு குறிப்பாக இக்கட்டுரை அமைகிறது.

இலங்கையில் *1940* களில் ஆரம்பமான முஸ்லிம் பெண் எழுத்தாளர் பரம்பரையில் இவர் மூன்றாம் தலைமுறைக்குரியவர். அறுபதுகளில் எழுதத் தொடங்கியவர் தொடர்ந்தும் எழுதி வருகிறவர். மலையகத்தில் ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் இலக்கியப் பரப்பில் மிகக் காத்திரமான இலக்கியப் பங்களிப்பு செய்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அந்த வரிசையில் நயீமா சித்தீக் என்பவரும் ஒருவர்.



இலங்கையின் அரசியல் வரலாற்றில் அறுபதுகளில் ஏற்பட்ட மாற்றம், ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றிலும் ஒரு முன்ஈர்ப்பைக் காண வைத்துள்ளது. ஈழத்தில் வெளியான சிறு சஞ்சிகைகள் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளன. அவற்றின் பங்களிப்பை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. அந்தளவுக்கு அவை பல எழுத்தாளர்களை உருவாக்கித்தந்துள்ளதுடன், எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து அவர்களை எழுதவைத்தது மட்டுமல்லாமல், தரமான இலக்கிய ஆக்கங்களையும் அவை தந்து நின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து சிற்பி சிவசரவணபவனை ஆசிரியராகக் கொண்டு *1958* ஆம் ஆண்டு வெளிவந்த ‘கலைச்செல்வி’தனது பண்ணையில் பல எழுழத்தாளர்கள் உருவாக்கத்திற்கு அடித்தளம் இட்டது. அதே போல் மலையக இலக்கியத்தை நோக்கும் போது அறுபதுகளின் பின் ‘மறுமலர்ச்சிக் காலம்’ என்றே குறிப்பிட வேண்டும். அந்த அறுபதுகளுக்கு பின்னர் தோன்றிய ஓர் எழுத்தாளர் ஆத்திர பரம்பரையினரின் வளர்ச்சியில் மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் கண்டி ஐயா க.ப.சிவனாரை இணையாசிரியராகக் கொண்டு வெளிவந்த “மலைமுரசு” என்பதே ஆய்வாளர்களின் கூற்று. மலைமுரசில் தனது ஆரம்ப எழுத்துருவை வெளிக்கொணர்ந்த பலர் இன்று மலையக மாணிக்கங்களாக மிளிர்வது கவனிக்கத்தக்க விடயமாகும். குறிப்பாகக் கூறுவதானால் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை மேற்கொள்ளாது ‘தேசபக்தன் கோ நடேசய்யர்’ ‘மலையகத் தமிழர் வரலாறு’ போன்ற வரலாற்று ஆய்வு நூல்களை மலையக

இலக்கிய உலகிற்கு அளித்துப் பலம் சேர்த்த ஆய்வாளர் அமரர் சாரல்நாடன், அமைதியே உருவான ஆசிரியை திருமதி லலிதா நடராஜா ஆகியோரின் வரிசையில் 'மலைமுரசில் முகிழ்ந்தவர்களில் ஒருவரே "இலக்கிய தாரகை" கலாபூஷணம் திருமதி நயீமா சித்தீக்.

"ஈழத்து இலக்கியத்திற்குத் தரமான சிறுகதை களைத் தந்துள்ள நயீமா ஏ. பஷீர் என்ற திருமதி நயீமா சித்தீக் சமுதாய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு இஸ்லாமிய குடும்ப விமர்சனமாக இவரது சிறுகதைகள் அமைந்துள்ளன" என்று பிரபல படைப்பாளியும் நாவலாசிரியருமான அமரர் செங்கைஆழியான் சுதந்திரன் சிறுகதைத் தொகுப்பில் இவரை அறிமுகப்படுத்துகிறார்.

இவர், பதுளை மாவட்ட அப்புத்தளையைப் பிறப்பிடமாகவும் தற்போது கம்பளையை வதிவிடமாக வும் கொண்ட நயீமா பஷீர் மரைக்கார் - தாஜ்பீவி தம்பதியினரின் ஏக புதல்வியாவார். இவர், பசறை மத்திய கல்லூரி, காத்தான்குடி மத்திய கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்து, பேராதனைப் பல் கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டதாரியுமாவார், (பி.ஏ.சிறப்பு) அத்துடன் தொழில் நிமித்தம் கல்வித்துறை டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டவர்.

இலக்கியத்துறையில் காலடி எடுத்து வைப்ப தற்கு தனது பெற்றோர் தன்னுள் ஏற்றிவைத்த ஆழமான வாசிப்பு மீதான ஆர்வமும், பசறை மத்தியக் கல்லூரி யின் தமிழாசிரியரான அமரர் ஐ. சாரங்கபாணியின் தூண்டுதலும் ஆசியுமே காரணங்களாக அமைந்தன எனக்கூறும் நயீமா தனது தாயார் மூலமே அக் காலத்தில் தமிழ் எழுத்துலகில் சிறந்து விளங்கிய புலமைப்பித்தன், கல்கி, ஜெயகாந்தன், லக்ஷ்மி, அகிலன் போன்ற பலரின் படைப்புகளைப் பற்றி அறிந்து கொண்டாதக் கூறி மகிழ்கிறார்.

சிறுகதைப் படைப்பாளியாக மலையக இலக்கிய உலகில் முதன் முதலாகத் தடம் பதித்த நயீமா சிறந்த சிறுகதைகள் பலவற்றை வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி, மற்றும் தமிழக தீபம் இதழ்களிலும், பிந்திய 90 களில் தோற்றம் பெற்ற தினக்குரல், நவமணி பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதியுள்ளார். தனது எழுத்துலகப் பணியோடு வானொலி நிகழ்ச்சிகளையும் திறம்படச் செய்துள்ளார். வானொலி ஆக்கப்பிரதிகள், வானொலி நாடகம், உரைச் சித்திரம் என்பவற்றையும் படைத்து வானலை யில் கலக்கச் செய்த பெருமைக்குரியவர்.

தனது இளமைக் காலத்தில் சிறுகதை, வானொலிப் பணிகளோடு நயீமா சித்தீக் சமூகப் பணிகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு மலையச் சமூக மேம்பாட்டுக்காகப் பணிபுரிந்துள்ளார். இவரது எழுத்துக்களில் காணப்பட்ட வேகம் சமூக மாற்றத்திற் கான எண்ணக் கரு. மலையகப்பெண்களின் வாழ்வி யலையும் அவர்களின் வாழ்க்கை அவலங்களைத் தனது மேடைப் பேச்சுக்களிலும், படைப்புகளிலும் மிக வீறாப்புடனும், ஆவேசத்துடனும் வெளிக்கொணர்ந்த தைக் காணமுடியும்.

இவரின் அருமை பெருமை, ஆற்றல்களை அறிந்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மறைந்த ஏ. அஸீஸ் அதன் மாதர் பிரிவுத் தலைவியாக இவரை நியமித்தார். இத்தொழிற்சங்கப் பணியின் மூலம் தோழர் நயீமா ஏ. பஷீர் மலையகத் பெருந்தோட்டப் பெண்களின் சமூக மேம்பாட்டிற்கான பல்வேறு செயற் திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயற்படுத்தினார்.

மலையகச் சிறார்களின் ஆரம்பக் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு அப்புத்தளையில் 'அசோகா வித்தியாலயம்' எனும் பெயரில்கல்விக் கூடம் ஒன்றினை நிறுவி மலையகக் கல்வி அபிவிருத்திக்குப் பங்காற்றியுள்ளார்.

படைப்பிலக்கியத்துறையில் தனது சாதனை யைத் தொடர்ந்து நிலைநாட்டி வந்த நயீமா பத்திரிகைத் துறையையும் விட்டுவைக்கவில்லை என்றே கூற வேண்டும். இவர் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அப்புத்தளைச் செய்தியாளராகப் பணிபுரிந்து அந்தப் பிரதேசத்தில் நடைபெற்ற சமூக அவலங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து மலையகத்தில் பெண் பத்திரிகை நிருபராக முதன் முதலில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டதோடு அக்காலத்தில் வெளிவந்த 'தீப்பொறி' இதழின் பெண்கள் பகுதியைப் பொறுப் பாளராக இருந்து அதனூடாகப் பெண்களின் விடிவிற்கு பல கேள்விகளைப் படைத்து அவற்றிற்கான தீர்வுகளை யும் முன் வைத்தவர்.

திருமதி சிவபாக்கியம் குமாரவேல் அவர்களோடு இணைந்து கண்டியில் 'மங்கை' என்ற பெண்களுக்கான இதழையும் நடத்தியது குறிப்பிடத்தக்கது. மலையகச் சஞ்சிகைகளை ஆய்வு செய்பவர்கள் ஏனோ அன்று தோன்றிய 'மங்கை' இதழை குறிப்பிடத் தவறிவிடுகிறாகள் என்ற ஆதங்கம் இவருக்குண்டு.படைப்பிலக்கியம், தொழிற்சங்கம், கல்வி என்று பல தளங்களில் தனது உழைப்பை வெளிகொணர்ந்த இவரின் பத்திரிகைத்துறை சார்ந்த பங்களிப்பு தனியாக நாம் கவனிக்க வேண்டும்.

எனது அறிவு வியாபிக்கும் போது நான் வாழ்ந்த பெருந்தோட்ட மக்களின் அவலங்கள் பலவற்றைப் போக்க நாம் என்ன செய்ய வேண்டும் அவற்றைச் செய்ய முடியுமா? என்று என்னுள் எழுந்த வினாவிற்கு விடையாகவே படைப்பிலக்கியங்களைப் பதிவு செய்யத் தொடங்கினேன் என்று கூறிப்பெருமைப்படும் இவர் அந்த மக்களின் ஏக்கங்கள், ஏளனப்பட்ட விடயம், சிறிய எட்டடி அறையில் வாழும் வாழ்க்கை, கூட்டுக் குடும்ப பாரம்பரியம், மிக வறுமையான சூழலிலும் நெறி பிறழாத வாழ்க்கை முறை பத்து மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மலையில் பாடுபட்டு வீடு திரும்பிய பின்னரும் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து முடிக்கும் திறன், அவர்களின் உழைப்பை உறிஞ்சயும் முதலாளி வர்க்கம், தொழிற்சங்கவாதிகளின் கபட நாடகம் என்பவற்றைக் கண்டதாலும், கேட்டதாலும் இவற்றுக்கெதிராக அந்தக் காலங்களில் மேடையில்

பேசவும் எழுதவும் முடிந்தது என்கிறார்.

இவரின் படைப்பிலக்கியப் பணியினை பாராட்டிப் பல்வேறு சமூக, பொது நிறுவனங்கள் விருது வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவை பின்வருமாறு:

- 1986ஆம் ஆண்டு மலையக கலை இலக்கியப் பேரவை இவரது இலக்கியப் பணிகளுக்கு விருது வழங்கி கௌரவித்தது.
- 1991 ஆம் ஆண்டு முஸ்லிம் சமயப் பண்பாட்ட லுவல்கள் அமைச்சு "நஜ்முல் அதீப்" (இலக்கியத் தாரகை) எனப்பட்டமளித்து விருது வழங்கி கௌரவித்தது.
- 1991ஆம் ஆண்டு மத்திய மாகாண முஸ்லிம் தமிழ் சாகித்திய விழாவில் "இலக்கிய தாரகை" எனும் பட்டமும் விருதுடனான சான்றிதழும். பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 1994ஆம் ஆண்டு அவர் பிறந்த மாவட்டமான ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழாவில் விருதுடன் சான்றிதழும். பொற்கிழியும் வழங்கிக் கௌர விக்கப்படார்.
- 2002ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 2002ஆம் ஆண்டு கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், ஞானம் இலக்கியப் பண்ணை யும் இணைந்து நடத்திய 'சுதந்திரன் சிறுகதைகள்' நூல் அறிமுகவிழாவின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர் களால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌர விக்கப்படார்.
- 2002ஆம் ஆண்டு இலங்கை அரசால் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 2004 ஆம் ஆண்டு உடத்தலவின்ன சிந்தனை வட்டம் இவருக்கு "சிறுகதைச் செம்மணி" என்ற விருதினையும் வழங்கி கொளரவம் செய்தது.
- கொடகே புத்தக மாளிகையின் அனுசரணை யுடன் சிங்கள்– தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் மூவின படைப்பாளிகளை கௌரவிக்கும் விழாவில் பாராட்டி கௌரவம் செய்தது.

ஈழத்துத் தமிழ் இலக்கியப்பரப்பில் சிறுகதைத் துறையில் இவரின் பங்களிப்பு விசாலமானதாகக் காணப்படுகிறது. சமூகத்தின் அவலங்களையும், மூட நம்பிக்கைகளையும் தத்ரூபமாகச் சித்தரிப்பில் இவரின் பாங்கு தனித்துவமாக கானப்படுகின்ற போதிலும் இவரின் கதைகள் மீதான சரியான விமர்சனப்பார்வை முன்வைக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது.

தனது படைப்புகளில் வாழ்க்கையின் உணர்வு களை மிக அவதானமாகப் பல்வேறு கோணங்களில் நோக்கியுள்ளார். அத்தளத்திலேயே அவர் படைத்த படைப்பான 'வாழ்க்கைப் பயணம்' எனும் முதலாவது நாவல் வீரகேசரி வெளியீடாக 1975ஆம் ஆண்டு வெளிவந்தது. இலங்கையில் முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவரினால் எழுதப்பட்ட முதலாவது நாவல் என்று குறிப்பிடப் படுகின்றது.

இவரது முதலாவது சிறுகதைத்தொகுதியான 'வாழ்க்கையின் சுவடுகள்' சிறுகதைத் தொகுதி நூல் எம்.எஸ்.ஹனிபாவின் கல்ஹின்ன தமிழ்மன்றத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. இத்தொகுதியில் பதினொரு சிறுகதைகள் அடங்கியுள்ளன. இந்நூல் தற்பொழுது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப்பாடத்தில் ஒரு பாடநூலாக உள்ளது. (1987)

இவரது இரண்டாவது சிறுகதைத்தொகுதியான வாழ்க்கை வண்ணங்கள்'உடத்தலவின்ன சிந்தனை வட்டம் சார்பாக 2004 இல் வெளிவந்தது. மூன்றாவது சிறுகதைத்தொகுதியான 'வாழ்க்கை வளைவுகள்' என்ற தொகுதி சென்னை மணிமேகலைப் பிரசுரத்தால் 2005ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இத்தொகுதியில் இருபது சிறுகதைகள் மக்களின் உள் உணர்வுகளை வெளிக் கொணருமுகமாக அமைந்திருப்பதாக விமர்சர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். அந்தனி ஜீவா 2005ல் தமிழக கலைஞன் பதிப்பகத்திற்கு தொகுத்த 25 பெண் பிரம்மாக்களின் 'அம்மா' என்ற சிறுகதைத் தொகுப்பிலும் இவரது சிறுகதை உள்ளது.

மானா மக்கீனை தொகுப்பாசிரியராகவும் லேனா தமிழ்வாணனை பதிப்பாசிரியராகவும் கொண்டு "தியாக திருநாள் கதைகள்" என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்தது. இந்தத் தொகுப்பில் எட்டு இந்திய எழுத்தாளர்களினதும், ஏழு இலங்கை எழுத் தாளர்களினதும் ஹஜ் திருநாளைப் பற்றிய சிறு கதைகளாக அமைந்திருந்தன. அதில் திருமதி நயீமா சித்தீக்கின் கதையொன்றும் வெளிவந்தது குறிபிடத்தக்க தாகும். மற்றும் பல தொகுப்புகளிலும் இவரின் பல சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

படைப்பிலக்கியத்திற்கு அப்பால் திருமதி நயீமா சித்தீக் கல்வித்துறை சார்ந்த "ஆயிரம் வினாக்களும் விடைகளும்" "சீறாப்புராண நபி அவதாரப் படலம்" என்ற இருநூல்களையும் வெளியிட்டுள்ளார்.

நயீமா சித்தீக் அவர்களின் இலக்கியப் பணியைக் கௌரவப்படுத்தும் வகையில் மல்லிகை இதழ் இவரைத் தனது 2006ஆம் ஆண்டு ஜூலை மாத இதழின் அட்டைப்பட அதிதியாக பிரசுரம் செய்தது. அதே போல் 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகையும் தனது ஜூன் 2013 157ஆவது இதழில் "மலையக முஸ்லிம்களின் முன்னோடிப் பெண் படைப்பிலக்கியவாதி" என்ற தலைப்பில் அட்டைப்பட அதிதியாக அறிமுகம் செய்தது. கலாபூஷணம் பீ.எம் புண்ணியாமீன் தொகுத்திருக்கும் இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரத்திரட்டிலும் இவரைப்பற்றிய பதிவு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் மலையக மண்ணில் அமைதி யாகவும் ஆரவாரம் எதுவுமின்றியும் வாழ்ந்து வரும் மலையகத்தின் மூத்த முஸ்லிம் பெண் தமிழ் எழுத்தாளர் திருமதி நயீமா சித்திக் அவர்களின் பணிகளை விதந்து நினைவு கூறுவது இவருக்கு நாம் செய்யும் கௌரவமாகும்.

நயீமா சித்தீக்

# ஹஜ்ஜின் நிறைவு

ஹஜ்ஜுப் பெருநாளின் ரம்மியமான காலைப்பொழுது, எங்கும், எதிலும் ஒரு தனிக் கவர்ச்சியும் பொலிவும் நிறைந்த வேளை.

ரஹ்மத்தும்மாவின் இல்லத்திலும் எத்தனையோ ஹஜ்ஜுப் பெருநாட்களுக்குப் பின்னர் இன்று நிறைவும், அந்த நிறைவு தந்த மகிழ்வும் முகையவிழ்த்துக் கமழ்கின்றன.

புதிய வாயில் சேலையின் பரபரப்போடு ரஹ்மத்தும்மா பள்ளிக்குப் புறப்பட்டாள். அவளுடைய மகள் மர்ளியாவும் கூட புத்தாடையுடன் புறப்பட்டு விட்டாள்.

"ஏய்....தாத்தா. தொழுது முடிஞ்சா சுருக்கா வூட்டுக்கு வந்திடு. அங்க எல்லோரோடயும் கதைச்சிக் கிட்டு நிண்டியானா... நாங்க பள்ளிக்குப் போனாப் போலதான்..." என்றவாறு தன் புதிய பொலி யஸ்டர் சேர்ட்டை மாட்டினான் மர்ளியாவின் தம்பி காதர்.

தன்னுடைய நீண்ட காலக்கனவான பொலி யஸ்டர் ஷேர்ட் தன் கைக்கு கிடைத்துவிட்ட நிறைவில் அவனது முகம் புதுச்சோபை பெற்றிருந்தது. அவனு டைய இரண்டு தம்பிகளும் மூன்று தங்கைகளும் புத்தாடை தந்த மலர்ச்சியோடு எங்குதான் ஓடிச் சென்றார்களோ தெரியவில்லை.

தாயும் மகளும் பள்ளியிலிருந்து வரும்வரையில் காதர் தான் வீட்டுக்கு காவல்.

மர்ளியாவும் தாயும் பள்ளி நோக்கி விரைந் தனர். முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரையில் கூட்டாகத் தொழக் கிடைக்கும் சந்தர்ப்பம் மிகவும் குறைவுதான். நோன்புகால "தராவீஹ்" தொழுகையை விட்டால் இரண்டு பெருநாட் தொழுகைகளும் மாத்திரம்தானே கூட்டாகத் தொழ முடியும். அதுவும் புத்தாடையுடன் பெருநாள் தொழச் செல்வது மிகவும் மகிழ்ச்சியான செய்தியேதான்.

மர்ளியாவோ எத்தனையோ பெருநாள்களுக் குப் பின்னர் இன்றுதான் போகிறாள். பல பெரு நாட்களுக்குத் தொழச் செல்லக்கூடியதற்கான போதிய ஆடைகள் அவளிடம் இருக்கவில்லை. இதனால் அவள் தொழப்போவதே இல்லை.

அவளது நீண்ட கனவு இன்று நனவாகி இருக்கிறது. அவள் தன் தலை முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்ட போது நைலக்ஸ் சாரியின் வழவழப்பு அவளது விரல்களுக்கு இதமாகப்பட்டது.

அவளது உள்ளத்தின் எண்ணங்கள் முகத்தில் அப்பட்டமாகப் பிரதிபலித்தன.

"என்ன மர்ளியா.. நான் முன்னுக்கு வாரதுகூடத் தெரியாம தனியா சிரிச்சிக்கிட்டுப் போற"

எதிரில் வந்த தன் நீண்ட நாட் தோழி சித்தியின் குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள் மர்ளியா.

"நீ பள்ளிக்கு வரல்லியா?" சுயநினைவு வந்தவளாக சித்தியைப் பார்த்துக் கேட்டாள்.

வராமல் என்ன? தாத்தா வீட்டிற்குப் போய் இதைக் குடுத்திட்ட....அப்படியே தாத்தாவையும் கூட்டிக்கிட்டு ஒரே ஓட்டமாய் பள்ளிக்கு வந்திடுறேன்" என்றவள் குனிந்து மர்ளியாவின் காதுக்குள் எதையோ சொல்லிவிட்டு நடந்தாள் சித்தி. அவள் என்னதான் சொன்னாளோ...மர்ளியாவின் முகம் இரத்தச் சிவப்பாக மாறியது.

பள்ளி சென்று மன நிறைவோடு இறைவழி பாட்டை முடித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் ஸலாம் கொடுத்துக் கொண்டபோது கூட எல்லோருமே மர்ளியா வையும் அவள் தாயையுமே பலவிதமாக நோக்கினர்.

பள்ளியை விட்டு வெளியே வந்தபோது மர்ளியாவைப் பலர் சூழ்ந்து கொண்டனர். ஒவ்வொருவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது மர்ளியாவின் முகம் ஏனோ சிவந்தது!

பள்ளிவாசலிலிருந்து தப்பினோம் பிழைத்தோம் என்று வீடு வந்து சேர்ந்தாள் மர்ளியா.

வயிறு நிறைய பிட்டையும் இறைச்சிக் கறியையும் தம்பி காதருக்குப் போட்டுக் கொடுத்தவாறே தானும் சாப்பிடத் தொடங்கினாள் மர்ளியா.

"தாத்தா...இன்னும் அஞ்சாறு நாளையில நீ எங்கள விட்டுப் போய்விடுவ இல்லையா?" என்று அடைத்த குரலில் மர்ளியாவைப் பார்த்துக் காதர் கேட்டபோது மர்ளியாவின் கண்கள் கலங்கின.

தேநீர் தயாரித்துக்கொண்டு இதைப் பார்த்துக் கொண்டிருந்த ரஹ்மத்தும்மாவின் கண்களிலும் நீர் முட்டியது.

சே! உடன்பிறந்த பாசத்துக்கு எதைத்தான் இணை கூற முடியும்? ரஹ்மத்தும்மாவுக்கு இந்தப் பாக்கி யத்தை ஆண்டவன் கொடுக்கவில்லை. அந்தக் குறை என்றுமே அவளது நெஞ்சில் இருக்கத்தான் செய்கிறது.

ரஹ்மத்தும்மா சமையலுக்கு ஆயத்தமானாள். ஓ எத்தனை காலத்துக்குப் பின்னர் இப்படி ஒரு நிகழ்ச்சி இந்த வீட்டில் நடைபெறுகிறது?

தேங்காய்களை உடைத்து வைத்துக்கொண்டு துருவ ஆரம்பித்தாள் மர்ளியா. அவளது சிந்தனை எங் கெல்லாமோ சுற்றி வட்டமிட்டன. இம்மாதிரிப் பெரு நாளையோ, இன்னும் ஒரு வாரத்தில் அவளுக்கு நடக்க விருக்கும் திருமணத்தையோ அவள். கனவிலும் எதிர் பார்த்திருக்கவில்லை.

ஒரு பாதியைப் போட்டுவிட்டு இன்னொரு பாதியை எடுத்துத் துருவத் தொடங்கினாள் மர்ளியா

மர்ளியாவின் தந்தையார் அதே ஊரில் வாழ்ந்த வர். நிறைய சொத்து சுகங்களைச் சேர்த்து வைக்கா விட்டாலும் நாணயத்தராகவும் நல்ல மனிதரென்ற பெயரையும் நிறைய சம்பாதித்து வைத்திருந்தார்

வியாபாரம் செய்வதுதான் அவருடைய தொழில்.

மழை அதிகமான நாளொன்றில்..

ஓ.. அது எவ்வளவு பயங்கரமான நினைவு! மாளியாவின் உடம்பே ஆட்டம் கண்டது.

அன்று மழை தொடங்கி ஏழாவது நாள். அன்றாடம் உழைத்தால்தான் சாப்பாடு என்ற ரீதியில் வாழும் அவர்களுக்கு ஏழாவது நாள் சாப்பிட ஒன்றுமே இல்லை. ஆறாவது நாளே கடன் கொடுக்க இனி ஒருவருமே இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது

அப்பொழுது, இப்போது ஒன்பது வயதை அடைந்திருக்கும் கடைசித்தம்பி நிஸாருக்கு இரண்டு வயது. எல்லாருமே சின்னஞ் சிறிசுகள், பசியை அவர்களால் அதற்கு மேல் பொறுக்க முடியாத இறுதிக் கட்டம். மழையும் தன் அசுர பலத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

மர்ளியாவின் தந்தை தன் வியாபாரப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு அதிகாலையிலேயே போனவர்தான். மகாவலியைக் கடக்கும்போது ஓடம் கவிழ்ந்து நான்காவது நாள்தான் அவரது சடலம் வீட்டுக்கு வந்தது. இயற்கை கொடுத்த அந்த பெரிய அடி, அந்தக் குடும்பத்தை நன்கு பாதித்து விட்டது. கடந்த பல வருடங்களாகப் படாதபாடெல்லாம் பட்டபின் இந்த வருடம்தான் சிறிது தலையைத் தூக்க முடிந்திருக்கிறது.

“என்னத்துக்கு மர்ளியா இவ்வளவு தேங்காய்?” என்ற ரஹ்மத்தும்மாவின் பேச்சு மர்ளியாவின் சிந்தனையைத் தடை போட்டு நிறுத்தியது

மர்ளியா எழுந்தாள்.

அந்த வீட்டில் பலகையால் மறைத்து அறை யாக உபயோகிக்கப்பட்டு வந்த பகுதிக்குள் போய் பள்ளிக்கு உடுத்திச் சென்று களைந்து போட்டிருந்த சேலையை எடுத்து மடிக்கத் தொடங்கினாள். அவளது மனதில் ஆனந்தமயமான நினைவுகள் படரத் தொடங்கின. அந்தச் சேலை அவளுக்குக் கணவனாக வரப்போகும் சுலைமான், பெருநாளைக்காக அனுப்பி இருந்த சேலை. அந்த நினைவே அவளை மகிழச் செய்தது.

சுலைமான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். சுலைமான் அவளுக்கு கணவனாக வருவதில் அவளுக்கு பூரண திருப்தி உண்டு. இதற்கு முன் - அதாவது சுலைமானை அவளுக்குப் பேசி வருவதற்கு முன் - எத்தனை இடங்களிலிருந்து பேசி வந்தார்கள். காசு என்ற ஒரு இக்கட்டு இடையில் வந்து வந்து குறுக்கிட்டதால் எல்லாமே தடையாகின.

சுலைமானைப் பேசி வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் இருக்கும். இறுதி முடிவாக சுலைமான் வீட்டார் ஐயாயிரத்துக்குக் குறைய எடுக்க முடியாதென்று கூறிவிட்டார்கள். இந்தத் துயரத்தோடு தான் அன்றும் சலீம் முதலாளியின் வீட்டிற்கு வேலைக்குப் போனாள் ரஹ்மத்தும்மா.

சலீம் முதலாளியின் மனைவி மிகவும் நல்ல மனம் படைத்தவள். சுபாவமாகப் பழகுபவள். ரஹ்மத்தும்மாவிடம் அன்புடன் கதைப்பாள், ரஹ்மத்தும்மாவும் எல்லாவற்றையும் அவளுடன் கதைப்பாள். அன்று தன் மனக்குறையையும் கூறினாள் ரஹ்மத்தும்மா.

சலீம் முதலாளியும் இம்முறை மக்கத்துக்குப் போய் தனது ஐந்தாவது கடமையை நிறைவேற்றிக் கொள்ள ஆயத்தமானார். அவரது இந்த முயற்சிக்கு மனைவி ஆரம்பத்திலிருந்தே அவ்வளவு விருப்பம் காட்டவில்லை. சலீம் முதலாளிக்கு இது பெரிய மனக்குறையாக இருந்தது.

“ஏன் பீபி நான் ஹஜ்ஜ/ செய்யுறது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?” என்று அவர் கேட்டபோது மனைவி சொன்ன பதிலைக் கேட்டு அவர் உண்மையிலேயே சிந்திக்கத் தொடங்கினார்.

“இங்க பாருங்க நீங்க ஹஜ்ஜுக் கடமையை நெறவேத்திட்டு வந்தா அந்த சந்தோசம் என்னைவிட யாருக்குக் கூட இருக்க முடியும்? அந்த நன்மையிலயும் கூட ஆண்டவன் எனக்கும் பங்கு தரத்தானே செய்வான். ஆனா...”

“சொல்லுங்க...”என்று அவர் உற்சாகமூட்டினார்.

சிறிது தயக்கத்துக்குப் பின்னர் அவரைப் பார்க்கத் தைரியமில்லாதவளாக, சுவரையே பார்த்துக்கொண்டு அவள் சொன்னாள்.

“எங்கூட ஆட்டுக்கு வேலை செய்ய வர்ர ரஹ்மத்தும்மா தாத்தாவுக்கு மிச்சம் கஷ்டமாக இரிக்கி. கொமருப்புள்ளய குடுத்துரிக்கிற வழியில்லாம தடமாரு றாங்க. பாவம் மனுசி. குஞ்சியும் குறுமானுமாக நெறய புள்ளைகள். அவங்களுக்குக் கொஞ்சம் காசு கொடுத்து உதவினா நல்லா இரிக்கும் எண்டுதான் நான் நெனைக் கிறேன். ஆண்டவன் ஹயாத்தை நீட்டிப் போட்டா இந்த வருஷமாவது ஹஜ்ஜுக்கு போகலாமில்லையா?”

இவ்வளவு பேசியதே அவளுக்குப் பெரிதாகப் பட்டது. அவள் மெதுவாக எழுந்து உள்ளறைக்குப் போய்விட்டாள்.

இரண்டு மூன்று நாட்கள் இருவரும் இதுபற்றி ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை.

ஐந்தாவது நாளாக இருக்கலாம். சலீம் முதலாளி காலையில் கடைக்குப் புறப்படும்போது மனைவியிடம் கூறினார்

“இண்டைக்கு ரஹ்மத்தும்மா தாத்தா வந்தால் நான் வருகிற வரையில் நிற்கச் சொல்லுங்க”

இதைக் கேட்டபோது மனைவிக்கு ஒரே மகிழ்ச்சி. தான் கூறும் நல்லாலோசனைகளை கணவன் ஏற்றுக் கொள்ளும்போது கிடைக்கும் மகிழ்ச்சியே அலாதியானதுதான்.

பின்னேரம் அவர் ஹஜ்ஜுக்குப் போக ஒதுக்கி இருந்த பன்னிரண்டாயிரம் ரூபாய்களும் ரஹ்மத்தும்மாவின் கைக்கு மாறியது.

”யா ரஸூலுல்லா...” என்று ரஹ்மத்தும்மா வாய்விட்டே கூவிவிட்டாள்.

அந்தக்கணத்தில் அந்த ஏழையின் உள்ளம் அடைந்த மகிழ்வு உண்மையிலேயே அல்லாஹ் அடைந்த மகிழ்வேதான். அந்த மகிழ்வின் நிறைவு சலீம் முதலாளிக்கும் அவரது மனைவிக்கும் இரட்டிப்பாகியது.

ஆக, சலீம் முதலாளி இம்முறை ஹஜ்ஜுக்குப் போகவில்லை...

ரஹ்மத்தும்மா சுலைமானை தன் மருமகனாக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். ஐயாயிரம் கொடுப்பதாக உறுதி வழங்கி கொடுத்தாள். மூவாயிரத்தை வீட்டை திருத்த ஒதுக்கினாள்.




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.